Koviloor Acadamy

உ989

நமது சமயம்

PRESENTED BY:
V. PR. PL. M.
KASIVISWANATHAN CHETTIAR
PAGA...

KVC05585

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்
திருநெல்வேலி & சென்னை

Koviloor Acadamy

:: நமது சமயம் ::

2989

Y. M. C. ASSOCIATION PAGANERI.

V. PR. PL
MK.
Paganeri
11-5-47

PRESENTED BY
V. PR. PL. M. KASIVISVANATHAN
CHETTIAR TO
THIRUVALLUVAR LIBRARY, PAGANERI

Koviloor Acadamy

நமது சமயம்

ஆசிரியர் :
யாழ்ப்பாணத்து நவாலியூர்
ந. சி. கந்தையா பிள்ளை

:: திருநெல்வேலி, தென்னிந்திய ::
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்
திருநெல்வேலி :: சென்னை

Koviloor Acadamy

Published by
The South India Saiva Siddhanta Works Publishing Society, Tinnevelly, Limited, Tirunelveli & . Madras

Q. H. M/S 95-B.—'2-47

Printed at
The Progressive, Printers G. T. Madras.

Koviloor Academy

முன்னுரை

ஒவ்வொரு மக்களும் தத்தம் மத வரலாறுகளை அறிந்திருக்கவேண்டியது இன்றியமையாதது. தமிழருடைய சமயம் மிகப் பழையதாதலின் அதன் பழைய வரலாறுகள் பல மறக்கப்பட்டுள்ளன. தமிழர் சமயம் என்பது தமிழ்நாட்டில் தோன்றித் தமிழரிடையே வளர்ச்சியடைந்தது. "அது ஆரிய மக்களால் தமிழருக்கு உதவப்பட்டது; தமிழர் வழிபடும் கடவுளர் ஆரியரின் கடவுளராவர்; அவர்களைக் குறிக்க வழங்கும் பெயர்களும் அம்மொழிக்குரியனவே" என்பனபோன்ற மாறுன கருத்துக்களும் தமிழ் நாட்டில் தோன்றி நிலைபெற்று விட்டன. உண்மையல்லாத கருத்துக்கள் பல நிலைபெறுவதற்குக் காரணம், வரலாற்று ஆராய்ச்சியின்மையாகும். இச் சிறிய நூலில், சமயம் எவ்வாறு தோன்றிப் படிப்படியே வளர்ச்சியடைந்து இன்றைய நிலையை அடைந்துள்ள தென்பதை வரலாற்று முறையாக விளக்கியுள்ளேம்.

சென்னை
27-1-47

ந. சி. கந்தையா.

Koviloor Acadamy

பொருளடக்கம்

Koviloor Acadamy

Koviloor Academy

நமது சமயம்

ஒவ்வொரு சமயத்தினரும் தத்தம் மதங்களின் வரலாறுகளை நன்கு அறிந்திருக்கின்றார்கள். நம்மிற் பலருக்கு நம் சமயத்தைப்பற்றிய வரலாறு தெரியாது. ஆகவே அவர்கள், தம்மை இந்துக்கள் எனக் கூறிக்கொள்கின்றனர். இந்துக்கள் என்பதற்கு இந்தியாவில் உள்ளவர்கள் என்பது பொருள். இந்து என்பது சிந்து என்பதின் திரிபு. சிந்து என்பது வட இந்தியாவின் மேற்குப் புறத்திலுள்ள ஒரு பெரிய ஆறு. அலக்சாந்தர் என்னும் கிரேக்கன் பாரசீகத்துக் கூடாக வட இந்தியாமீது படை எடுத்து வந்தான். அவன் வட இந்தியாவிலே சிந்து நதிப்பக்கத்தே இருந்த நாடு ஒன்றை வெற்றி கொண்டான். அதன்பின் சிலகாலம் கிரேக்கர் ஆட்சி வட இந்தியாவில் இருந்தது. இன்று இந்தியா என வழங்கும் நம் நாடு நாவலந்தீவு அல்லது பாரத நாடு எனப் பெயர் பெற்றிருந்தது. பாரத நாட்டைக் கிரேக்கர் ஹிந்து நாடு என வழங்கினர். இங்ஙனம் சிந்து என்பது ஹிந்து ஆயிற்று. பின்பு ஹிந்து இந்து ஆயிற்று. இந்துவிலிருந்து இந்தியா என்னும் பெயர் உண்டாயிற்று. ஐரோப்பிய சாதியினர், கிரேக்கர் நமது நாட்டுக்கு இட்டு வழங்கிய

Koviloor Acadamy

ஹிந்து என்பதையே பெயராக வழங்கினர். ஆகவே சில நாற்றாண்டுகளாக நமது நாடு இந்தியா எனப் படுகின்றது.

இன்று ஒருவன் தன்னை இந்து சமயத்தவன் எனக் கூறினால் அது, அவன் கிறித்துவம் மக மதியம் என்னும் சமயங்களல்லாத ஒரு சமயத்தவன் என்பதைத் தெரிவிக்கும். இந்திய நாட்டில் புத் தம், சைனம், வைணவம், சைவம் முதலிய பல சம யங்கள் இருக்கின்றன. இந்து எனக் கூறுவதால், கூறுபவனின் சமயம் இது எனத் தெளிவுபடுத்த முடியாமல் இருக்கின்றது. ஆகவே ஒருவன் தன்னை இந்து என்பதற்கு ஈடாக, தனது சமயம், புத்தம், சைனம், சைவம், வைணவம் என்பவை களில் ஒன்றைக் குறிப்பிடுதல் சிறப்புடையதாகும்.

நமக்கு எல்லாம் ஒருமொழி தாய்மொழியாக இருக்கின்றது. அதுபோலவே நம் எல்லோருக் கும் பொதுவாகிய ஒரு சமயமே முற்காலத்தில் இருந்தது. இன்றும் அம்மதக் கொள்கைகளே இருந்து வருகின்றன. நாம் இந்நூலில் நமது சமயத்தைப்பற்றிப் படிப்போம்.

Koviloor Acadamy

சமயத்தின் தொடக்கம்

நாம் நமது சமயத்தைப் பற்றி அறியுமுன் சமயம் என்றால் என்ன? அது எவ்வாறு தோன்றிற்று? என்பன போன்ற கேள்விகளுக்கு விடைகளை அறிய வேண்டும். மக்கள் ஒரு காலத்தில் விலங்குகள் போன்று மிகக் கீழ்நிலையில் இருந்தார்கள். அப்பொழுது அவர்களின் கருத்தும் செயலும் உணவு தேடுதல் ஒன்றிலேயே முனைந்து இருந்தன. அக் காலத்தில் சமயம் தோன்றியிருக்க முடியாது. ஒரு சிறிய குழந்தைக்குச் சமயம் இருக்கிறதா? மக்களின் அறிவு காலந் தோறும் சிறிது சிறிதாகப் பண்பட்டு வந்தது. அப்பொழுது அவர்கள் எளிதில் உணவைப் பெறும் வழிகளை அறிந்தார்கள்; மன அமைதி உண்டாயிற்று. ஓடி உலாவித் திரியும் மனிதன் பின்பு ஒரு நாள் உயிர்ப்பின்றிப் பிணமாய்க் கிடப்பதைப் பார்த்து மனிதன் நினைக்கலானான். அவன் மரணமென்றால் என்ன? என்று அறியப் பெரிதும் முயன்று வந்தான். இவ்வுடலை விட்டு நீங்கிய உயிர்கள் ஆவி உடலில் நிலைபெறுவதை அவன் சில சமயங்களில் கண்டான். இன்றும் இறந்தவர்களை ஆவி வடிவில் பலர் பார்த்திருக்கின்றார்கள். இவ்வகை நிகழ்ச்சிகளைப் பற்றிய பழங்கதைகள் இவ்வுலகம் முழுமையிலும் நிலவுகின்றன. ஆதிகால மக்கள் இறந்தவர்களை ஆவிவடிவிற் கண்டமையால் மரணத்துக்குப் பின் உயிர்கள் அழிவதில்லை

Koviloor Acadamy

என்னும் முடிவுக்கு வந்தார்கள். இவ்வுலக மக்கள் எல்லோரிடையும் இக் கருத்தே இன்றும் நிலவுகின்றது. சமயசம்பந்தமாக மக்கள் ஆதியிற் கண்ட பெரிய உண்மை இதுவேயாகும். மரணத்துக்குப் பின் உயிர் அழிந்துவிடுகின்றது எனக் கூறும் மதம் இவ்வுலகில் இல்லையாகும்.

தென்புலத்தார் வழிபாடு

இறந்தவர்களை ஆவிவடிவிற் கண்ட மக்கள் அவைகளுக்குப் பசியுந் தாகமும் பிற தேவைகளும் உண்டு என நினைத்தார்கள். அவர்கள் ஆவி, உடலின் பக்கத்தே உறைகின்றது என நம்பினமையின் பிணத்தை அடக்கஞ் செய்யும்போது பக்கத்தே உணவு, நீர் அவர்கள் பயன் படுத்திய பொருள்கள் என்பவைகளை வைத்தார்கள். முற்கால் சமாதிக்குழிகளில் எல்லாம் இவைகள் காணப்படுகின்றன. இறந்தவரின் கிட்டிய உறவினர் இறந்தவருக்கு ஒவ்வொருநாளும் உணவும், நீரும் படைத்தும் வந்தார்கள். எல்லாமக்களுக்கும் இவ்வாறு செய்வது அரிதாயிருந்தது. அதிகாரி அரசன் போன்ற பெருமக்களுக்கு இவ்வாறு செய்தல் எளிதாயிருந்தது. மற்றவர்கள் ஆண்டில் ஒருமுறை இறந்தவரைக் குறித்து உணவும் நீரும் படைத்து வந்தார்கள். இவ்வகை வழக்குப் பெரும்பாலும் எல்லா மக்களிடையும் காணப்படுகின்றது.

Koviloor Academy

அச்சமாதிகளே காலத்தில் சிறு தெய்வங்களாக மாறின. மழையின்மை, நோய் முதலிய தோன்றிய காலங்களில் அவ்வகை நிகழ்ச்சிகள் ஆவிகளின் கோபத்தினுல் உண்டாகின்றன என்று கருதப்பட்டது. ஆகவே அவ்வாவிகளுக்கு மடைகள் இடப்பட்டன. மக்களுக்கு நோய்கள், பேய்களால் உண்டாகின்றன என்று இன்றும் பிற்போக்குடைய மக்கள் நம்பிவருகின்ருர்கள். இறந்தவர்களை வழிபடும் வழிபாடு தென்புலத்தார் வழிபாடு எனப்படும். தென்புலத்தார் வழிபாடு பின்பு தெய்வ வழிபாடாக மாறிற்று. "தென்புலத்தார் தெய்வம்" எனத் திருக்குறளிலும் கூறப்பட்டுள்ளது.

சிறுதெய்வ வழிபாடு

இறந்தவர்களைப் புதைத்த இடத்தில் நிழலின் பொருட்டுப் பந்தலிட்டு அவ்விடத்தில் பலியிடப்பட்டது. சில சமயங்களில் இறந்தவனின் வீட்டுக்குப் பக்கத்தே நிற்கும் மரத்தின் கீழ் பலியிடப்பட்டது. காலப்போக்கில் இறந்தவர்களைப் பற்றிய நினைவு மறக்கப்பட்டது. ஆகவே மரங்களும் சமாதி இடங்களும், மக்களுக்கு நன்மையையோ, தீமையையோ விளைக்கக் கூடிய தெய்வங்கள் உறையும் இடங்களாகக் கருதப்பட்டன். கடவுளர் இறந்தவர்களின் பெயர்களைப் பெற்றனர். குடும்பத்தில் இறந்தவர்களின் ஆவிகள் இல்லுறை தெய்வங்

Koviloor Academy

களாயின. இறந்த குடும்பத் தலைவன் குடும்பத் தெய்வம் ஆயினான். பல குடும்பங்களடங்கிய ஒரு கூட்டத்தினரின் இறந்த தலைவன் குலதெய்வமாயினான். பல குலத்தினருக்குத் தலைவனாகி யிருந்து இறந்த அரசன் நாட்டுக்குரிய தெய்வமாயினான். இவ்வாறு சிறியவும் பெரியவும் தெய்வங்கள் தோன்றலாயின. இவ்வகை வழிபாடுகளை நாம் இன்றும் காண்கின்றோம். சில கிராமத் தெய்வங்கள், சில எல்லைத் தெய்வங்கள், சில பரிவாரத் தெய்வங்கள், சில பெரிய தெய்வங்கள் எனத் தெய்வங்கள் வழங்குவது இக்காரணம் பற்றியேயாகும்.

பூசாரி

பொது மக்களில் இறந்தவர்களுக்குக் குடும்பத்தில் வயதின் மூத்தவர் பலியிட்டார். அரசர் அதிகாரி என்பவர்களுக்குச் சிறப்புக் காலங்களில் அவர்களின் புதல்வர்கள் பலியிட்டார்கள். மற்றைக் காலங்களில் அடிமைகள் அல்லது வேலையாட்கள் அதற்காக நியமிக்கப்பட்டார்கள். அதற்காக அவர்களுக்குக் கூலி கொடுக்கப்பட்டது. கூலி அவர்களுக்கு ஒழுங்காகக் கிடைக்கும் பொருட்டும், அவர்கள் செய்துவரும் பணி கால்வழி கால்வழியாக வரும்பொருட்டும் அச் சமாதிகளுக்கு மானியங்கள் விடப்பட்டன. சமாதிகளில் பணிசெய்வோர் மானியங்களாற் கிடைக்கும் வருவாயை

Koviloor Academy

அனுபவித்து வந்தனர். காலத்தில் இறந்தவரைப் பற்றிய நினைவு மறக்கப்பட்டுச் சமாதிகள் கோயிலாயின. அடிமைகளும் வேலையாட்களும் தமது தொடக்கத்தை மறந்தார்கள். அவர்கள் பூசாரிகளானார்கள். அவர்கள் தாம் தெய்வத்துக்கு அடுத்த படியிலுள்ளவர்கள் எனக் கருதினார்கள். பூசாரி பணி செய்யும் தெய்வத்தின் பெருமை எவ்வளவு பெரிதாகின்றதோ அவ்வளவுக்குப் பூசாரியின் பெருமையும் பெரிதாகின்றது. தெய்வம் பெருமை அடைவதற்குப் பெரிய கட்டிடம் வேண்டும். ஆகவே சமாதியைச் சுற்றிப் பெரிய கட்டிடங்கள் எழுந்தன.

சமய நூல்கள்

பூசாரி தன்னையும் தான் பணிசெய்யும் தெய்வத்தையும் பெருமைப்படுத்த விரும்பினான். அவன் சில உண்மை வரலாறுகளோடு தெய்வங்களையும் தொடர்பு படுத்திச் சில கதைகளை எழுதினான். அவன் தன்னைப்பற்றி மறக்கவில்லை. தன்னையும் இடையிடையே நூலில் தொடர்பு படுத்தினான். அக் கதைகள் கோயில்களில் படிக்கப்பட்டன. அவைகளைப் பலர் வந்து கேட்டார்கள்; அவர்கள் அக் கதைகளை உண்மையென நம்பினார்கள். பூசாரியிடத்தும் தெய்வத்திடத்தும் மிகவும் பயபத்தியுடையவரானார்கள். கோயிலுக்குப் பலர் வரத்

Koviloor Acadamy

தொடங்கினார்கள். அவர்கள் பல காணிக்கைகளைத் தெய்வத்துக்குக் கொடுத்தனர். அவைகளைப் பூசாரி எடுத்துக்கொண்டான். பூசாரியிடத்தில் பொருள் திரண்டது. செல்வத்தினால் அதிகாரம் உடையவன் ஆயினான். இவ்வாறு சமயம் சிறிது சிறிதாக மக்களிடையே தோன்றி வளர்ச்சி அடைவதாயிற்று.

ஞாயிற்று வணக்கம்

மக்களின் அறிவு வளர்ச்சியுற்றது. இறந்தவர்களின் ஆவிகளைவிட மேலான ஒரு பொருள் இருக்கவேண்டுமென அவர்கள் கருதினார்கள். அது என்ன என்று அறிந்துகொள்ள அவர்களால் முடியவில்லை. இவ்வுலகின் இருளை ஓட்டுகின்ற ஞாயிறே அதுவாகலாம் என்னும் முடிவுக்கு அவர்கள் வந்தார்கள். ஆகவே ஞாயிறே எல்லாக் கடவுளருக்கும் மேலான கடவுள் எனக்கொண்டு வழிபட்டார்கள். இவ்வுலகில் ஞாயிற்றைத் தெய்வமாகக் கொண்டு வழிபடாத மக்களே இலர். முற்காலங்களில் மக்கள் பெரும்பாலும் மலைசார்ந்த இடங்களிலேயே வாழ்ந்தார்கள். அவர்கள் மலைக்கு மேலால் எழுந்துவரும் ஞாயிற்றினை எல்லாம் வல்ல கடவுளாகக் கருதி வழிபட்டார்கள். இவ்வுலகில் பழைய மக்கள் கடவுளின் பெயராக இட்டு வழங்கிய பெயர்கள் எல்லாம் ஒளி, அல்லது ஒளியுடையவன் என்னும் பொருள் உடையனவாக இருக்

Koviloor Academy

கின்றன. ஞாயிற்று வணக்கம் உலகில் மிக மேலாக ஓங்கியிருந்தது. இன்றும் ஞாயிற்று வணக்கம் மறைந்து விடவில்லை. நாம் தைமாதப் பிறப்பில் கொண்டாடும் பொங்கல் விழா, கிறித்தவர்கள் கொண்டாடும் ஈஸ்டர் விழா முதலியன ஞாயிற்று வணக்கங்களேயாகும். இன்றும் ஈஸ்டர் நாளில் அயர்லாந்து மக்கள் மலைகள் மீது ஏறிநின்று உதயமாகும் ஞாயிற்றுக்கு வணக்கம் செலுத்துவர். ஞாயிற்றுக் கடவுள் பெரிய கடவுள் ஆகக் கொள்ளப்பட்டபோது முன்பு மக்கள் வழிபட்டு வந்த கடவுளர் ஞாயிற்றுக் கடவுளுக்குக் கீழ்ப்பட்ட தெய்வங்களாகக் கொள்ளப்பட்டு வந்தனர்.

அரசன் கடவுள் ஆதல்

ஞாயிற்று வணக்கம் மக்களிடையே வலுவடைந்த காலத்தில் இன்னொரு கருத்துத் தோன்றுவதாயிற்று. ஞாயிறு இவ்வுலகம் முழுமைக்கும் அரசன்; தனக்குப் பதில் மக்களை ஆளும்பொருட்டு ஞாயிற்றுக் கடவுளால் அனுப்பப்படுபவர்களே அரசர். அவர்கள் ஞாயிற்றுக் கடவுளின் புதல்வர்களாவர். மரணத்துக்குப் பின் அவர்கள் ஞாயிற்றுக் கடவுளை அடைகிறார்கள் என மக்கள் நம்பத் தலைப்பட்டார்கள். அப்பொழுது அவர்கள் அரசரைக் கடவுளாகவே கொண்டு வழிபட்டனர். சில நாடுகளில் அவர்களுக்கு விழாக்கள் எடுக்கப்பட்

Koviloor Acadamy

டன. அவர்கள் அக்காலங்களில் நகர்வலஞ் செய்யப்பட்டார்கள். அரசரும் தாம் கடவுளின் குமாரர்கள் என்றே நம்பி வந்தார்கள். அவர்களின் கட்டளைகளைக் கடப்பவர்கள் கடவுளின் ஆணையைக் கடப்பவர்களாவர் என்னும் கருத்துக்கள் தோன்றலாயின. இங்கிலாந்துச் சரித்திரம் படிக்கும்போது அரசர் தாம் கடவுளிடம் பெற்றுள்ள அதிகாரத்தினுல் நினைத்தவைகளைச் செய்யும் உரிமை படைத்தார்கள் எனக் கருதியிருந்தார்கள் என அறிகின்ரேம். அரசன் இறந்த பின்பு அவன் ஞாயிற்றுக் கடவுளை அடைகின்ருன் எனக் கருதப் பட்டமையால் அவன் கல்லறை கோயிலாக மாறி வழிபாட்டுக்குரியதாயிற்று. எகிப்திய நாட்டில் இவ்வாறு ஞாயிற்றுக் கடவுளாகிய அரசரின் ஆலயங்கள் " ரா " எனப்படும்.

தாய்க் கடவுள்

தாய்க் கடவுள் வழிபாடு மிகப் பழமையுடையது. இது ஞாயிற்றுக் கடவுள் வழிபாட்டுக்கு முன் தோன்றியிருந்தது. இன்று உலகில் தந்தையே முதன்மைபெற்று விளங்குகின்ருன். முற்காலத்தில் தாயே பெருமை பெற்று விளங்கினுள். அவளுக்கே சொத்து இருந்தது. தாயைச் சூழ்ந்து பிள்ளைகள் இருந்தார்கள். அவர்கள் தாயே எல்லாம் வல்லமை உடையவள் எனக் கருதினுர்கள். ஆகவே அவர்கள்

Koviloor Acadamy

கடவுளைத் தாய் வடிவில் வழிபட்டு வந்தார்கள். இவ்வுலகில் தாய்க் கடவுள் வழிபாடே எல்லா வழிபாடுகளிலும் முற்பட்டது. இதனை வரலாற்று ஆசிரியர்கள் நன்கு ஆராய்ந்து கூறியிருக்கின்றனர். இவ் வழிபாடு மக்கள் மிகக் கீழ் நிலையில் உள்ளபோது தொடங்கியது ஆதலின் இவ் வழிபாட்டில் நர பலி, எருமைப் பலி முதலியன நடைபெற்றன. இன்று நரபலி நின்றுவிட்டாலும் விலங்குப் பலிகள் நின்று விடவில்லை.

தரைக் கடவுள்

தாய்க் கடவுள் வழிபாடு இன்னொரு வகையிலும் தோன்றிற்று. மனிதனின் உணவுக்கு இன்றியமையாத காய்கனிகள், தானியங்கள் முதலியவை; களைக் கொடுக்கும் பயிர் பச்சைகள் எல்லாம் இம் மண்ணினின்றே தோன்றுகின்றன. இது முற்கால மனிதனுக்கு வியப்பு அளிப்பதாயிருந்தது. பயிர் பச்சைகளை எல்லாம் ஈனுகின்ற இத்தரையை அவர்கள் பெரிய தாய்க் கடவுள் எனக் கொண்டார்கள். அவர்கள் தரைக் கடவுளுக்குப் பலிகள் கொடுத்து வழிபட்டார்கள். பயிரிடும் பருவ காலங்களில் தரைக் கடவுளுக்குப் பெரிய விழாக்கள் எடுக்கப்பட்டன. தரைக் கடவுளைத் தாய்க் கடவுளாகக் கொண்டு வணங்கும் வணக்கம் இவ்வுலகம் முழுமையும் பரவியிருந்தது. இவ்வழிபாடே சத்தி வழிபாடு எனப்பட்டது. தரைக் கடவுள் தாய்க்

Koviloor Acadamy

கடவுளாகக் கொள்ளப்பட்டபோது பெண்களும் தாய் என்னும் தன்மையினால் பெருமைபடுத்தப் பட்டார்கள். அவர்களுக்கு உயர்வு அளிக்கப் பட்டது.

இலிங்க வழிபாடு

ஞாயிற்றுக் கடவுளை எல்லாக் கடவுளரிலும் சிறந்த கடவுளாக மக்கள் கொண்டு வழிபட்டார்கள் என முன் ஓரிடத்தில் கூறினோம். மக்கள் தொடக்கத்தில் மலைமீது எழும் ஞாயிற்றைக் கண்டு வழி பட்டார்கள். அவர்கள் மலை இல்லாத நாடுகளிற் சென்று குடியேற நேர்ந்தது. அப்பொழுதும் அவர்கள் ஞாயிற்றுக் கடவுள் மலைமீது எழுந்து வரும் தோற்றத்தைக் கண்டு வழிபட விரும்பினார்கள். அவர்கள் தாம் வாழும் இடங்களில் செய் குன்றுகளை எழுப்பினார்கள்; அச் செய்குன்றின் மீது எழுந்துவரும் ஞாயிற்றைக் கண்டு வழிபட்டார்கள். மலைகள் கடவுளுக்கு உறைவிடங்கள் எனக் கருதப்பட்டமைக்குக் காரணம் இதுவே. பழைய பாபிலோனியர், கிரேக்கர், இந்தியர், அமெரிக்கர், ஆபிரிக்கர் முதலிய மக்கள் எல்லோரும் தமது கடவுளின் இருப்பிடம் மலை இடங்கள் எனவே கொண்டார்கள். ஆபிரிக்கா, அமெரிக்கா, மேற்கு ஆசியா முதலிய நாடுகளில் ஞாயிற்று வழிபாட்டின் பொருட்டு எழுப்பப்பட்ட செய்குன்றுகள் பல காணப்படுகின்றன. கிறித்துவ வேதத்தின் பழைய

Koviloor Acadamy

ஏற்பாட்டில் சொல்லப்படும் பேபெல் என்னும் ஆலயம் இவ்வகையினதே.

மக்களுக்குச் செய்குன்றுகளை எல்லா இடங்களிலும் எழுப்புவது எளிதில் முடியவில்லை. மக்கள் தாம் தாம் இருக்கும் இடங்களுக்கு அண்மையில் ஞாயிற்றுக் கடவுளை வழிபட விரும்பினார்கள். அவர்கள் மலைகளின் வடிவமாகிய முக்கோணக் கற்களை மன்றங்கள் அல்லது திறந்த வெளிகளில் நாட்டினார்கள். அவர்கள் அதனை ஞாயிற்றுக் கடவுளைக் குறிக்கும் வடிவமாகக் கருதி வழிபட்டார்கள். மக்கள் நின்று வழிபடுதற்கு நிழல் வேண்டியிருந்தது. ஆகவே ஞாயிற்றுக் கற்கள் நிழல் மரங்களின் கீழ் வைக்கப்பட்டன. முக்கோண வடிவம் காலத்தில் அடி நிமிர்ந்து நுனி குவிந்த வடிவமாக மாறியுள்ளது. கிறித்துவ வேதத்தின் பழைய ஏற்பாட்டினுல் மரங்களின்கீழ் வைத்து வழிபடப்பட்ட இலிங்க வடிவங்கள் செருசலேமில் ஒவ்வொரு வீதியிலும் இருந்தனவெனத் தெரிகின்றது. ஞாயிற்று வணக்கம் எவ்வாறு இவ்வுலகம் முழுமையிலும் பரவியிருந்ததோ அவ்வாறே இலிங்க வழிபாடும் பரவியிருந்தது. முகமதியர் மெக்காவிலே வழிபடும் காபா என்னும் சிலையும் முற்காலச் சிவலிங்கமேயாகும். இவ்வழிபாடு மக்களிடையே மிக வேரூன்றி இருந்தமையால் விக்கிரக வணக்கத்தை முற்றாகக் கடிந்த முகம்மது நபியால் காபா வணக்கத்தைக் கடிய முடியவில்லை. வேறு வகைகளில் தோன்றிய சில வணக்கங்களும் இலிங்க வணக்கத்தோடு ஒன்றாகக்

Koviloor Acadamy

கருதப்படுகின்றன. இலிங்க வணக்கத்தின் தொடக்கம் இங்குக் கூறப்பட்டதேயாகும்.

தென்னிந்திய சிவன் ஆலயங்களின் கருவில் வைக்கப்பட்டிருக்கும் வடிவங்கள் பெரும்பாலும் இலிங்கங்களாயிருக்கின்றன. ஒவ்வொரு ஆலயத்துக்கும் ஒவ்வொரு மரம், கோவில்மரம் (தலவிருட்சம்) எனச் சொல்லப்படுகின்றது. இதனால் தொடக்கத்தில் மரங்களின்கீழ் வைத்து வழிபடப்பட்ட இலிங்கங்களைச் சுற்றிப் பிற்காலத்தில் பெரிய கோயில்கள் எடுக்கப்பட்டுள்ளன என்று நன்கு விளங்குகின்றது.

மனிதன் உலோகங்களைப் பற்றி அறியாதிருந்த காலத்திலே இவ்வணக்கம் தோன்றியிருத்தல் கூடும். ஆலயங்களின் கருவில் வைக்கப்படும் கடவுள் வடிவங்கள் கல்லிற் செதுக்கப்பட்டவையாகவே இருக்கின்றன; உலோகத்தால் செய்யப்படுவதில்லை.

இலிங்கங்களுக்குப் பதில் மனித வடிவங்கள்

அரசன் ஞாயிற்றின் புதல்வன் என்று கொள்ளப்பட்ட காலத்தில் ஞாயிற்றுக் கடவுள் அரசன் அல்லது பேரரசன் வடிவில் வழிபடப்படலாயிற்று. இறந்தவர்களின் ஆவிகளும் தெய்வங்கள் ஆயின என்று முன் ஓர் இடத்திற் கூறியுள்

Koviloor Acadamy

ளோம். இறந்தவர்களின் சமாதிகளில் இறந்தவரின் வடிவங்களும் வைத்து வழிபடப்பட்டன. வீரர் போரில் இறந்தால் ஒரு கல்லில் இறந்தவரின் வடிவையும் அவர் புரிந்த வீரச் செயல்களையும் வரைந்து இறந்த இடத்தில் நட்டு வழிபடுவது முற்கால வழக்கு. இவ்வழக்கு யாம் கூறியதை நன்கு வலியுறுத்துகின்றது. வடிவங்கள் எழுதாமல் சமாதிகளில் கற்கள் நடப்படுவதும் உண்டு. இன்று கருவில் இலிங்கம் அமைக்கப்பட்டுள்ள தென்னிந்திய ஆலயங்களில் உலோகங்களினாற் செய்யப்பட்ட மனித வடிவுடைய கடவுள் வடிவங்கள் இருத்தலைக் காண்கின்றோம். இதனால் மனித வடிவினவாகிய கடவுள் வடிவங்கள் பிற்காலத்தில் தோன்றின என்று நன்கு விளங்குகின்றது.

ஞாயிற்றுக் கடவுளின் பழைய பெயர்கள்

ஞாயிற்றுக் கடவுளின் பழைய பெயர்கள், எல், சிவன் என்பன. எல் என்பது ஞாயிற்றைக் குறிக்கும் பழந்தமிழ்ச் சொல். மேற்கு ஆசியா அராபியா முதலிய நாடுகளில் ஞாயிற்றுக் கடவுள் எல் என்றே அழைக்கப்பட்டார். இந்தியா இலங்கை முதலிய நாடுகளிலும் இப்பெயர் வழங்கிற்று. கிறித்துவ வேதத்தில் கடவுளைக் குறிக்க எல், எலியன், எலோக்கிம், எல்சடை முதலிய பெயர்கள்

Koviloor Acadamy

காணப்படுகின்றன. இலங்கைத் தீவு எல்லம் என்றே முற்காலத்தில் அறியப்பட்டது. எல் சம்பந்தமான இடப்பெயர்கள் இலங்கையில் காணப்படுகின்றன. இந்திய நாட்டில், எல்லப்பன் எல்லையன் முதலிய தெய்வங்கள் காணப்படுகின்றன. அல்லா என்னும் முகமதியர் கடவுளின் பெயர் எல்லா என்பதன் வேறுபாடே.

சிவன் என்னும் பெயரும் ஞாயிற்றுக் கடவுளைக் குறிக்க வழங்கிய பழைய பெயர். இப்பெயருள்ள இடங்கள் ஆசியாவின் பல பகுதிகள், ஆபிரிக்கா, அமெரிக்கா முதலிய நாடுகளிற் காணப்படுகின்றன. எபிரேயர் எனப்பட்ட யூத மக்களின் பழைய பஞ்சாங்கத்தில் ஆண்டின் மூன்றாவது மாதம் சிவன் எனப்பட்டது. ஆபிரிக்காவிலே சிவன் என்னும் பாலை நிலப் பசுந்தரை யுள்ளது. அங்குப் பழைய ஞாயிற்றுக் கோயில்களின் அழிபாடுகள் காணப்படுகின்றன. பாபிலோன் மக்களும் ஆண்டின் மூன்றாவது மாதத்தைச் சிவன் என்றே வழங்கினர். கிறித்துவ மறையில் சியன் என்னும் தெய்வம் கூறப்பட்டுள்ளது. அது சிவன் என்னும் பெயரின் உச்சரிப்பு வேறுபாடு என மேல்நாட்டு அறிஞர் ஆராய்ந்து கூறியுள்ளார்கள். இவைகளால் முற்கால மக்கள் ஞாயிற்றுக் கடவுளை எல், சிவன் என்னும் பெயர்களால் வழிபட்டு வந்தார்கள் என நன்கு விளங்குகின்றது.

Koviloor Acadamy

ஞாயிற்றுக் கடவுளின் வடிவம்

ஆதிகால மக்கள் ஞாயிற்றை நேரில் கண்டு வழிபட்டார்கள். பின்பு மக்கள் செய்குன்றுகள் அமைத்துச் செய்குன்றின்மீது வட்ட வடிவங்களை வைத்து வழிபட்டனர். பின்பு ஞாயிற்றுக் கடவுள் பேரரசன்வடிவில் வழிபடப்பட்டார். இன்று நம் நாட்டில் சிவன் கடவுள் எவ்வடிவில் வழிபடப்படுகின்றதோ அவ்வடிவுடனேயே ஞாயிற்றுக் கடவுள், மேற்கு ஆசியா, சின்ன ஆசியா, கிரீஸ், பிரிட்டன் தீவு முதலிய இடங்களில் வழிபடப்பட்டார். இதனை வலியுறுத்தும் பழங்காலக் கடவுளின் வடிவங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

ஆசிய துருக்கி அல்லது சின்ன ஆசியா என்று வழங்கும் நாட்டில் கிதைதி என்னும் பழைய நாடு ஒன்று உள்ளது. அங்கு கல்லிற் செதுக்கப் பட்ட ஒரு சிவன் வடிவம் இருக்கின்றது. அது மிகப் பழமையுடையது. இடபத்தின் மீது கடவுள் நிற்கின்றார். கடவுளின் ஒரு கையில் கீழும் மேலும் முத்தலைகள் உடைய சூலம் இருக்கின்றது. இன்னொரு கையில் மழு இருக்கின்றது. வேறொரு ஓவியமும் பழைய அழிபாடு ஒன்றிற் கண்டுபிடிக்கப்பட்டது. அவ்வோவியத்தில் முக்கோண வில்லைப் பிடித்த ஒரு கடவுள் வடிவம் எருதின்மேல் நிற்கின்றது. அதின் இன்னொரு கையில் மூன்று கவருள்ள இடியேறு இருக்கின்றது. அக்கையினால் அது எருதின் மூக்காங் கயிற்றைப் பிடித்திருக்கின்றது. மேற்

Koviloor Academy

குறித்த சிலையையும் பிற்கூறிய ஓவியத்தையும் சரித்திர வல்லார் நன்கு ஆராய்ந்து அவை இந்திய நாட்டில் வழிபடப்படும் சிவன் கடவுளின் வடிவங்களே என முடிவு செய்துள்ளார்கள்.

கிதைதி நாட்டில் பழைய நாணயம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது. அந்நாணயத்தின் ஒருபுறத்தில் சிங்கங்கள் சுமக்கும் பீடத்தின்மீது தாய்க்கடவுளும், இடபங்கள் சுமக்கும் பீடத்தின்மீது தந்தைக் கடவுளும் இருக்கும் வடிவங்கள் காணப்படுகின்றன. அவ்வடிவங்கள் இந்திய மக்கள் வழிபடும் சிவன், அம்மன் என்னும் கடவுளரைக் குறிப்பன என்று ஆராய்ச்சியாளர்கள் கூறியுள்ளார்கள்.

பாபிலோன் நாட்டில் எருதின்மீது அதன் மூக்காங்கயிற்றை ஒரு கையாற் பிடித்துக்கொண்டும் மற்றைக் கையில் மூன்று கவர்களுடைய இடியேற்றைப் பிடித்துக் கொண்டும் நிற்கும் வடிவம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது.

சிரியா என்னும் நாட்டில் செப்புத் தகட்டில் வெட்டப்பட்ட அழகிய கடவுள் வடிவம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது. அக்கடவுள் இடபத்தின் மீது நிற்கின்றார். ஒரு கையில் இரண்டு பக்கங்களிலும் முத்தலைகளுடைய வேல் இருக்கின்றது. மற்றக் கையில் இரண்டு பக்கங்களிலும் அலகுகள் உடைய கைக்கோடரி இருக்கின்றது. இடபத்தின் நெற்றியில் பூமாலை கட்டப்பட்டிருக்கின்றது. இவ் வடிவம் இன்று இந்தியாவில் வழிபடப்படும் சிவ

Koviloor Acadamy

வடிவத்தைப் பெரிதும் ஒத்துள்ளது. இவ்வடிவில் கடவுளை வழிபடும் வழிபாடு உரோம், பிரிட்டன் முதலிய நாடுகள் வரையில் பரந்திருந்தது என ஆராய்ச்சிவல்லார் குறிப்பிட்டிருக்கின்றனர். இடபத்தை ஊர்தியாகவுடைய ஞாயிற்றுக் கடவுளின் வடிவம் இந்திய நாட்டில் ஆதியில் தோன்றிற்று என்று அறியக்கூடியதா யிருக்கின்றது.

இடப ஊர்தி

இடபம் கடவுளின் ஊர்தி ஆனமையால் அது வழிபாட்டுக் குரியதாயிற்று. எகிப்திலே ஞாயிற்றுக் கடவுளின் ஊர்தி இடபம். அது தூய வெண்மை யுடையதாயிருந்தது. சிவனின் ஊர்தியாகிய இடபமும் "வெள்ளேறு." மேற்கு ஆசிய நாடுகளில் வழிபாட்டுக்குரியதாயிருந்த இடபத்தின் வடிவங்கள் நாணயங்களிற் பொறிக்கப்பட்டுள்ளன. கிரேத்தா, சீரியா, பினீசியா, சுமேரியா முதலிய நாடுகளில் கண்டுபிடிக்கப்பட்ட நாணயங்களில் இமில் உடைய இடபங்கள் பொறிக்கப்பட்டிருக்கின்றன. இந்திய மாடுகளுக்கே இமில் உண்டு. மேற்கு ஆசியா, சின்ன ஆசியா, கிரேத்தா எகிப்து முதலிய நாடுகளிலுள்ள எருதுகளுக்கு இமில் இல்லை. இக்காரணத்தினால் இடப வழிபாடு இந்திய நாட்டினின்றே மற்றைய நாடுகளுக்குச் சென்றதென வரலாற்றாசிரியர்கள் துணிந்தார்கள். இடப வழிபாட்டை

Koviloor Acadamy

ஒப்ப இடபத்தை யுடையதாய்ச் சூலமும் மழுவும் தாங்கிய கடவுள் வடிவமும் இந்திய நாட்டினின்றும் சென்றதெனத் துணியப்படுகின்றது.

இடபம் கடவுளின் ஊர்தியாக ஏன் தெரிந் தெடுக்கப்பட்டது என்னும் கேள்வி எழலாம். ஆரியர் இந்திய நாட்டுக்கு வந்த பின்பே குதிரையைப் பற்றி இந்தியர் அறிந்தார்கள். அதற்கு முன் கழுதையும் இடபமும், எருமையுமே சுமை தூக்கு வதற்கும், மக்களைச் சுமந்து செல்வதற்கும் பயன் படுத்தப்பட்டன. இவைகளுள் எருதே சிறந்த ஊர்தி யாகக்கொள்ளப்பட்டது. ஆகவே அதனை முற் கால அரசரும் பெருமக்களும் தமது ஊர்திகளாகப் பயன்படுத்தினர். ஆனமையினாலேயே இடபம் கடவுளின் ஊர்தியாயிற்று. இன்று சிவன் ஆலயங் களின்முன்னால் நந்தி வைக்கப்பட்டிருத்தலைக்காண லாம். இவ்வாறே செருசலேமில் இலிங்கங்களின் முன்னால் இடபங்கள் வைத்து வழிபடப்பட்டன. இஸ்ரவேலர் இடபத்தை வழிபட்ட வரலாறு விவிலியவேதத்தின் பழைய ஏற்பாட்டிற் பல்லிடங் களிற் காணப்படுகின்றது.

தாய்க் கடவுளின் வடிவம்

இந்திய மக்கள், தாய்க்கடவுளைச் சிங்க வாக னத்தில் வீற்றிருப்பவளாக வடிவமைத்து வழிபடு கின்றார்கள். இவ்வடிவிலேயே எகிப்தியர், சீரியர், கிதைதி மக்கள் பாபிலோனியர் முதலிய மக்கள்

Koviloor Acadamy



இரேத்தாவில் வழிபடப்பட்ட தாய்க்கடவுள், (காளி).



சின்ன ஆசிய மக்களின் தாய்க்கடவுள்.



எகிப்தியரின் தாய்க்கடவுள்.

Koviloor Acadamy

தாய்க்கடவுளை வழிபட்டார்கள் எனத் தெரிகின்றது. இவ்வகைக் கடவுள் வடிவங்கள் அந்நாடுகளிற் காணப்படுகின்றன. தந்தைக் கடவுளை இடப ஊர்தியுடையவராகக்கொண்டு வழிபடும் வழிபாட்டை ஒப்பத் தாய்க் கடவுளைச் சிங்க ஊர்தி உடையவளாகக் கொண்டு வழிபடும் முறையும் இந்திய நாடு முதல் மேற்கு ஆசியா எகிப்து, கிரேத்தாத் தீவு முதலிய இடங்கள் வரையில் பரவி யிருந்ததென விளங்குகின்றது. இங்குக் காட்டப்பட்டுள்ள தாய்க்கடவுளின் வடிவங்களை நோக்கி உண்மை அறிக.

அம்மை அப்பர்

தனித்தனியே வழிபடப்பட்ட தந்தை தாய்க் கடவுளர், காலத்தில் கணவன் மனைவியராகக் கொள்ளப்பட்டனர். கடவுள் உயிர்களிடத்தில் தாயுந் தந்தையும் போன்ற அன்புடையவர் என்னும் கருத்தினால் அவர்கள் கணவன் மனைவிய ராக்கப்பட்டார்கள் போலும். மற்ற நாடுகளிலும் இம்முறையினராகவே அவர்கள் கொள்ளப்பட்டார்கள்.

முச்சுடர் வணக்கம்

ஞாயிறு வழிபடப்பட்டது போலவே ஒளியுடைய திங்கள், நெருப்பு என்பனவும் மக்களால் வழிபடப்பட்டன. அமெரிக்கா ஆப்பிரிக்கா, மேற்கு

Koviloor Acadamy

ஆசிய நாடுகளில் திங்கட் கடவுளின் கோயில்களாக எழுப்பப்பட்ட செய்குன்றுகள் காணப்படுகின்றன. மேற்கு ஆசியாவில் திங்கள் கடவுளைக் குறிக்க மரத் தூண்கள் நிறுத்தப்பட்டன. திங்களை ஒப்பத் தீயும் வழிபடப்பட்டது. நிம்ரொட் என்னும் அரசன் தீ வழிபாட்டை ஆரம்பித்தான் என விவிலிய மறை கூறுகின்றது. பாரசீகம், எகிப்து, மேற்கு ஆசியா, உரோம் முதலிய நாடுகளில் தீக் கடவுளின் ஆலயங்களில் குன்றாத் தீ எரிக்கப் பட்டது. தீ அணைந்து போகாதபடி பார்த்துக் கொள்வதற்கு அரச குடும்ப, உயர்குலக் கன்னிப் பெண்கள் நியமிக்கப்பட்டார்கள். திங்கள் வழிபாடும் தீ வழிபாடும் கொள்கையளவில் ஞாயிற்று வழிபாடேயாகும். ஒளியுடைப் பொருள்களாகிய மூன்றையும் எந்நேரத்திலும் கண்டு வணங்க முடியாத மக்கள் ஞாயிறு, திங்கள், தீ என்பவைகளைக் குறிக்க வட்டம், வில், முக்கோணம் என்னும் வடிவுள்ள குண்டங்களை அமைத்து அவைகளில் தீயை எரித்து வழிபட்டனர். அவை முத்தீ எனப்பட்டன.

சிவனுக்கு மூன்று கண்கள்

மக்கள் சிவனை அரச வடிவில் வழிபடத் தொடங்கியபோது அவர்கள் கடவுளுக்கு ஞாயிறும் திங்களும், நெருப்பும் கண்கள் எனக் கொண்டார்கள். இவ்வாறு மக்கள் கடவுளுக்கு மூன்று கண்

Koviloor Academy

கள் எனக் கொண்டு வழிபடத் தொடங்கிய காலம் மிகப் பழமையுடையது. சிந்து வெளியிற் கண்டு பிடிக்கப்பட்ட பழம் பொருள்கள் ஐயாயிரம் ஆண்டு களுக்கு முற்பட்டவை. அங்குக் கிடைத்த முத்திரை களில் கடவுளின் மூன்று கண்கள் வழிபடப்பட்டன என்னும் செய்தி காணப்படுகின்றது. மொகஞ் சதரோ முத்திரையிற் காணப்பட்ட சிவன் வடிவம் பாம்போடு தொடர்புடையதாகவும் காணப்படுகின் றது. ஞாயிறு எங்கு எங்கு வழிபடப் பட்டதோ அங்கு எல்லாம் பாம்பும் வழிபடப்பட்டது. இறந்த வரின் சமாதிக்கு மேலால் ஊர்ந்து செல்லும் பாம்பு இறந்தவரின் பிறப்பாகக் கருதப்பட்டது. ஆகவே பாம்புகளும் இறந்தவர்களின் ஆவிகளை ஒப்ப உலக மக்களால் வழிபடப்பட்டன. ஞாயிற்றுக் கடவுள் அல்லது சிவன் கடவுளே முதன்மையான கடவுள் என்று மக்கள் கொண்ட காலத்தில் முன் தோன்றி நடைபெற்ற வணக்கங்கள் சிவ வணக்கத்தோடு இணைக்கப்பட்டன. பாம்புகள் சிவனுக்கு ஆபரணங் களாயின; முச்சுடர்கள் கண்களாயின; பேய்கள் படைகளாயின.

மாதொரு பாதிக் கடவுள்

மக்கள் தாயை முதன்மையாகக் கருதிவந்த காலம் ஒன்று இருந்தது. பின்பு ஒரு காலத்தில் தாயும் தந்தையும் சமமானவர்கள் என்னும் கருத்து நிலைபெற்றது. அக்காலத்தில் மக்கள்

Koviloor Acadamy

கடவுளைப் பாதி ஆணும், பாதி பெண்ணுமாகிய வடிவில் வைத்து வழிபடுவாராயினர். இவ்வகை வடிவம் மிகப் பழைய காலத்திலேயே இருந்ததென் பதற்கு மொகஞ்சதரோ, சுமேரியா முதலிய இடங் களிற் கண்டுபிடிக்கப்பட்ட முத்திரைகள் சான்றளிக் கின்றன என்று ஹெரஸ் பாதிரியார் கூறி யுள்ளார்.

நடராச வடிவம்

நடராசன் என்பதற்கு நடனசபைக்குத் தலை வன் அல்லது நடனத்துக்குத் தலைவன் என்பது பொருள். முற்கால மக்கள் கடவுளை ஆடிப்பாடி வணங்குவது வழக்கு. "நாவார்ந்த மறைபாடி நட்ட மாடி நான்முகனு மிந்திரனு மாலும் போற்ற" என்பது போன்ற வாக்கியங்களை நோக்குக. தாவீது அரசன் யேகோவாக் கடவுளுக்கு முன்னல் கூத்தாடினன் என்னும் செய்தி விவிலிய வேதத் திற் காணப்படுகின்றது. முற்கால மக்கள் தமது உணர்ச்சிகளை மெய்ப்பாட்டால் காண்பிப்பது வழக்கு. மெய்ப்பாடு என்பது உள்ளத்து உணர்ச்சி மெய்யிடத்துத் தோன்றுதல். மெய்ப்பாடு காரண மாக ஆடல் தோன்றும். முற்கால அரசன் ஒருவன் தனக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லை என்னும் பெருமிதம் காரணமாக ஆடும் ஆடலின் பாவனை யாக நடராச வடிவம் அமைந்துள்ளது. அடைக்

Koviloor Academy

கலம் புகுந்தாரைக் காத்தல் என்னும் கருத்தில் ஒரு கை கவிந்திருக்கின்றது. பகைவரை கொல்லுதல் என்னும் கருத்தில் மனித உருவத்தின்மேல் ஒற்றைக் கால் ஊன்றி நிற்கின்றது. முற்கால அரசன் தன்னைப் பணிந்த அரசரின் முடிமீது தனது காலை வைத்து அருளல் வழக்கு. பணிந்தவரின் தலைமீது வைத்தற்குத் தூக்கிய பாவனையில் அமைந்துள்ளது தூக்கிய திருவடி.

முருகன்

முருக வணக்கம் ஞாயிற்றுக் கடவுள் வணக்கத்தின் இன்னொரு வகையாகும். பாலத்தீன் நாட்டில் ஞாயிற்றுக் கடவுள் முதிய பகல், இளம் பகல் என இருவகையாக வழிபடப்பட்டார். இளைய பகல் போர்க் கடவுளாகவும் இருந்தது. தமிழ் மக்கள் கடல் மீது எழும் இள ஞாயிற்றை மயில்மீது எழுந்துவரும் கடவுளாக உருவமைத்து வழிபடுவாராயினர். மொகஞ்சதரோ முத்திரை யொன்றில் ஞாயிற்றுக்கு ஆறு கதிர்கள் இருக்கின்றன. ஒவ்வொரு கதிரின் அந்தத்திலும் வெவ்வேறு வகையான தலைகள் காணப்படுகின்றன. பிற்காலத்தில் இத் தலைகளே ஆறுமுகங்களுடைய கடவுளாக மாறியிருக்கலாமெனத் தெரிகின்றது.

Koviloor Acadamy

வருணன்

முற்கால மக்கள் வருணன், மால், வேந்தன், முதலிய கடவுளரையும் வழிபட்டார்கள். இவர்களைப் பற்றியும் நாம் அறிந்துகொள்ளுதல் வேண்டும். கடற்கரைகளில் வாழ்ந்த மக்கள் வருணனைத் தமது நிலத்துத் தெய்வமாகக் கொண்டு வழிபட்டார்கள். வருணன் என்னும் கடவுள், இறந்துபோன கடற்கரை நாட்டு அரசன் ஒருவன் தொடர்பான வழிபாடு ஆகலாம். வருணன் என்பது விரி என்னும் அடியாகப் பிறந்து பரவையைக் (கடலை) குறிக்குமெனச் சிலர் கருதினர்கள். ஞாயிற்று வழிபாடல்லாத வழிபாடுகள் பெரும்பாலும் இறந்தவர் வழிபாட்டினின்றே தோன்றியுள்ளன. வருணனைக் கடற்கரை மக்களல்லாத மக்கள் வழிபடவில்லை. ஆரிய மக்கள் இவ்வருணனைத் தமது தெய்வங்களுள் ஒன்றாகக் கொண்டு வழிபட்டனர். வருணன் அசுரன் எனப்பட்டார். அசுரர் திராவிட வகுப்பினர்; சிவன் வணக்கத்தினர்.

மால் வணக்கம்

சங்கு சக்கரம உடையதாகியஒரு கடவுள் தமிழ் மக்களால் வழிபடப்பட்டது. மா எல் என்பதற்குப் பெரிய அல்லது கருமையுடைய ஞாயிறு என்று பொருள். மாலின் கையில் இருக்கும் சக்கரமும் சங்கும் ஞாயிற்றைக் குறிப்பன. எல் என்பது ஞாயிற்

Koviloor Academy

றைக் குறிக்க வழங்கிய இன்னொரு பெயர். யூதேயா நாட்டிலும் ஞாயிற்றுக் கடவுள் மொலொச், யேகோவா என்னும் பயர்களால் வழிபடப்பட்டார். சிவன், மால், எல், அல்லா என்பன எல்லாம் ஒரே கடவுளைக் குறிக்கும் பெயர்களாகும். வட நாட்டாரின் விஷ்ணு, விண் என்னும் தமிழ் அடியாகப் பிறந்த பெயர். விஷ்ணு என்பதும் ஞாயிற்றையே குறிக்கின்றது. மால் மூவடிகளால் உலகத்தை அளந்தார் என்பது, ஞாயிறு காலை, நண்பகல், மாலை என்னும் மூன்றுகாலங்களில் செல்லும் செலவினைக் குறிப்பது.

வேந்தன்

வேந்தன் என்பது அரசனுக்குப் பெயர். வயலையும் வயல் சார்ந்த இடங்களிலுமுள்ள மக்கள் இறந்துபோன அரசனை வழிபட்டார்கள். இவ் வழிபாடு இறந்தோர் வழிபாடு சம்பந்தமுடையது. நீதி தவறாது ஆளும் அரசனின் ஆட்சியால் மழை பெய்கின்றதென்றும் மக்கள் நம்பினார்கள். அக் காரணத்தினாலும் அரசன் வழிபடப்பட்டான். வேந்தன் என்பது பிற்காலத்தில் இந்திரன் எனப் பட்டான். இந்திரன் என்னும் பெயர் வேதகாலத்து இந்திரன் எனக்கருத இடமில்லை. கிருஷ்ணா நதியின் முகத்துவாரத்தில் அமராபதி என்னும் பழைய நகரமுண்டு. அமராபதி இந்திரனின் இராசதானி எனப்பட்டது. கிருஷ்ணா நதி முகத்துவாரத்தில்

Koviloor Academy

இந்திரன் என்னும் பெயருடைய அரசர்கள் இருந்து ஆட்சிபுரிந்தார்கள் எனத் தெரிகின்றது. இந்திரன் தெய்வ உலகத்துக்கு அரசன் என்னும் புராணகாலத்துப் பழங் கதைகளைப் பின்பற்றி வேந்தன் இந்திரன் எனப்பட்டிருக்கலாம்.

ஞாயிற்றுக் கடவுள் சின்னங்கள்

ஞாயிற்றுக் கடவுளைக் குறிக்கும் சின்னங்களுள் இலிங்கவடிவம் முக்கியமானது. அதனை ஒப்ப சுவஸ்திக் அடையாளமும் ஞாயிற்றுக் கடவுளைக் குறிக்க இவ்வுலகம் முழுமையிலும் வழங்கிற்று. இற்றைக்கு ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட மொகஞ்சதரோ முத்திரைகளில் இவ் வடையாளங்கள் காணப்படுகின்றன. இவ்வடையாளம் எகிப்து, மேற்கு ஆசியா, சின்ன ஆசியா, கிழக்குத் தீவுகள் முதலிய நாடுகளில் எல்லாம் ஞாயிற்றுக் கடவுளின் சின்னமாகப் பயன்படுத்தப் பட்டது. இவ்வடையாளம் புத்தர்களால் பயன் படுத்தப்பட்டது. ஹிட்லரும் இதனைப் பயன்படுத்தி யுள்ளார். சமக்கிருத மொழியில் இது சுவஸ்திகம் என வழங்குகின்றது. ஆரியர் இந்திய நாட்டுக்கு வருமுன் தொட்டு இவ்வடையாளம் இந்திய நாட்டில் வழங்கிற்று. ஞாயிற்றுக்குச் சிவன் என்னும் பெயர் பழமைதொட்டு வழங்குகின்றதெனக் கூறினோம். ஆகவே சுவஸ்திகம் என்பது சிவன்

Koviloor Academy

சம்பந்தமானது என்னும் கருத்தில் சிவன் என்னும் அடியாகப் பிறந்த தாகலாம் எனக் கருத இடந்தருகின்றது.

சிலுவைக்குறி

கிறித்துநாதர் சிலுவையில் அறையப்பட்டார். ஆகையினாலேயே சிலுவை தூய்மையுடைய தாக வும், சமய சின்னமாகவும் கிறித்துவரால் பயன் படுத்தப்படுகின்றது எனப் பலர் நினைக்கின்றார் கள். இக்கருத்துத் தவறானது. கிறித்துநாதர் பிறப் பதற்குப் பலநூற்றாண்டுகளுக்குமுன் தொட்டுச் சிலுவைக் குறிகள் ஞாயிற்றின் அடையாளமாகப் பயன் படுத்தப்பட்டன. இவ்வகை அடையாளங்கள் கிரீஸ், உரோம், திராய் (Troy) இந்தியா முதலிய இடங்களிற் பழம்பொருள்களிற் பொறிக்கப்பட் டிருக்கின்றன. ஆதியில் புள்ளடி போன்ற வடிவ மும் ஞாயிற்றைக் குறிக்க வழங்கப்பட்டது. புள்ளடி வடிவான உருவின் கீழேயுள்ள காலை நீட்டிப் பீடத்தில் இறுக்கப்பட்டபோது அது சிலுவையா யிற்று. புள்ளடியிலுள்ள கோடுகளின் நுனிகளை வளைத்துவிட்டால் சுவஸ்திகமாகும். சுவஸ்திகம் சிலுவை என்பன முற்காலத்தில் வேறுபாடுகள் இன்றி வழங்கின.

Koviloor Acadamy

சங்கு

எங்கு எங்கு ஞாயிற்றுக் கடவுளின் வழிபாடு காணப்பட்டதோ அங்கெல்லாம் சங்கு புனித முடையதாகக் கொள்ளப்பட்டது. சமயச் சடங்கு களில் அது பயன்படுத்தப்பட்டு வந்தது. கிறித்துவ ஆலயங்களில் சங்கு ஒலிக்கப்பட்டது எனக் கிறித் துவ வேதத்தின் பழைய ஏற்பாட்டிற் படிக்கின் றோம். இன்றும் சில கிறித்துவ ஆலயங்களில் சங்கு சில சிறப்புக்காலங்களில் ஒலிக்கப்படுவதை வரலாற்றாசிரியர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். இந் தியா தொடக்கமாக கிழக்குத் தீவுகள், சீனு, சப் பான், அமெரிக்கா, மத்திய தரைநாடுகள் முதலிய இடங்களிலெல்லாம் சங்கு சமய சம்பந்தமான கிரியைகளிற் பயன்படுத்தப்பட்டன. திருமாலின் கையில் இருப்பது சங்கு. சங்கு தூய்மை யுடைய தென மக்கள் கருதினமையால் அதனை அரிந்து செய்யப்பட்ட வளை, மோதிரம் முதலியனவும் சிறந்த அணிகளாகக் கருதப்பட்டன.

முத்து

சங்கு மிகவும் பரிசுத்த முடையது என மக்கள் கருதியது போலவே சங்கினின்றும் கிடைக்கும் முத் தையும் மிகப் புனிதமுடையதாக அவர்கள் கருதி னர். முத்து அருமையாகக் கிடைக்கின்றமையாலும், விலேயேறப் பெற்றதாதலாலும் அரசரும் பெரு

Koviloor Academy

மக்களுமே அவற்றை அணிந்தார்கள். கடவுளும் முத்துக்களால் அலங்கரிக்கப்பட்டனர். முற்காலம் ஞாயிற்றுக் கடவுளின் ஆலயங்களில் பூசாரிகளா யிருந்த அரசரும் பெருமக்களும் அவ்வகளை அணிவாராயினர். அவைகளை அணிவதால் அவர் கள் ஞாயிற்றுக் கடவுளின் அடியவர் என்று அறியக்கூடியதா யிருந்தது. இவ்வழக்கிலிருந்தே உருத்திராக்கம் அணியும் வழக்குத் தோன்றி யிருத்தல் கூடும்.

காவியுடை

இந்திய நாட்டில் மாத்திரமன்று; எல்லா நாடு களிலும் சிவப்புஉடை அரசர் பெருமக்களின் உடையாகவிருந்தது. இது அரசர் ஞாயிற்றுக் கடவுளின் புதல்வர் என்று கருதப்பட்டமையினுல் ஆகலாம். அக்காலத்தில் பொதுமக்கள் சிவப்பு ஆடை அணிய அனுமதிக்கப்படவில்லை. கடவுள் வடிவங்களுக்குச் சிவப்பு ஆடையே உடுத்தப் பட்டது. அரசர், குருமார், பெருமக்களல்லாதார் சிவப்பு உடை அணிதல் ஆகாது என்னும் சட்டம் உரோமில் இருந்தது. இச் சட்டத்துக்கு மாருக நடந்தோர் கொலைத்தண்டம் போன்ற கொடிய தண்டனை அடைந்தார்கள். மத்திய தரைக் கடல் ஓரங்களில் வாழ்ந்த பினீசியமக்களே இவ்வகைச் சாயம் ஊட்டிய ஆடைகளைப் பல இடங்களுக்குக் கொண்டு சென்று விற்று வாணிகம் செய்து

Koviloor Academy

தார்கள். செவ்வாடை மிக விலையுயர்ந்ததாக விருந்தது. அது பொன்னுக்குச் சமமாக நிறுத்து விற்கப்பட்டதெனக் கூறப்படுகின்றது. பினீசியர் இந்திய நாட்டில் கொண்டுவந்து விற்ற செவ்வாடைகள் பச்சவடம் எனப்பட்டது. பச்சவடம் என்பது சிவப்பு என்னும் பொருள் தரும் ஒரு பினீசிய மொழிச் சொல்லின் திரிபு. சிவப்பு உடையை இந்திய நாட்டிலும் அரசரும், பூசாரிகளும் பெருமக்களும் அணிந்தார்கள். ஞாயிற்றுக் கடவுளின் அடியவர்களும் அதனை அணியும் வழக்கம் உண்டாயிற்று. சிவப்பு ஆடை மிக விலையேறப் பெற்றிருந்தமையால் சிவப்புக்குப் பதில் காவி உடைகள் அணியப்படுகின்றன. காவியுடை கடவுளின் அடியவன் என்பதைக் குறிப்பிடுகின்றது. இன்றும் உரோமான் கத்தோலிக்க பெரிய குரு "பேப்பிள்" என்னும் ஒரு வகைக் கருஞ் சிவப்பு நிற அங்கியை அணிவார்.

கோயில்

மக்கள் ஞாயிற்றை முழுமுதற் கடவுளாகக் கொள்ளாத காலத்து ஆலயங்கள் சமாதிகளின் வடிவாகக் கட்டப்பட்டன. கிறித்துவ ஆலயங்கள் நிலத்தின்கீழ் உள்ள சமாதிக் கல்லறையை மேலே தோன்றும்படி எடுக்கப்பட்ட அமைப்புடையன என்று சொல்லப்படுகின்றன. மக்கள், ஞாயிற்றுக்

Koviloor Acadamy

கடவுள் அரசருக்கெல்லாம் தந்தை எனக் கொண்ட காலத்தில் கோயில்கள் அரண்மனையின் வடிவாக அமைக்கப்பட்டன. அரசனைச் சூழ்ந்து, அவன் சுற்றத்தினர், அமைச்சர், பெருமக்கள், பரிவாரங்கள் முதலியோர் உறைவர். அதனை ஒப்பவே ஆலயங்களிலும் தலைமைக் கடவுள் நடுவில் வீற்றிருக்க, அவருக்குக் கீழ்ப்பட்ட தெய்வங்கள் நாற்புறத்தும் சூழ்ந்திருக்கக் காண்கின்றோம். இந்தியா மேற்கு ஆசியா, எகிப்து முதலிய நாடுகளின் பழைய ஆலய அமைப்புக்கள் ஒரே வகையின.

கோயிற் கிரியைகள்

கோயிற் கிரியை என்றால் என்ன? அதன் தொடக்கம் யாது? என அறிந்து கொள்ள வேண்டியது அவசியமாகும். கோயில் என்றவுடன் கடவுள், பூசாரி, வழிபடுவோர் என்பவர்களின் தோற்றங்கள் நமது அகத்தே தோன்றுகின்றன. ஓர் அரசன் அல்லது பெருமகனுக்கு அவன் அடிமைகள் அல்லது வேலைக்காரர் காலையில் நித்திரை விட்டு எழுந்தது முதல் இரவில் நித்திரைக்குப் போகும் வரையில் செய்யும் பணிவிடைகளைப் புரிதல் அல்லது புரிதலாக நடித்தலே ஆலயக் கிரியைகளாகும். கும்பிடுதல், தோப்புக் கரணம் போடுதல் போன்றன, என்றும் அவருக்கு அடங்கி நடப்போம், அவர் சொற்களைத் தட்டமாட்டோம் என்பது போன்ற கருத்துக்களை விளக்குவனவாகும்.

Koviloor Academy

எகிப்து, மேற்கு ஆசியா, இந்தியா முதலிய நாடுகளின் கோயிற் கிரியைகள் ஒரே வகையின. பழைய எகிப்தியரின் கோயிற் கிரியைகளைப் பின்பற்றிச் செய்யப்படுவதே இன்றைய உரோமன் கத்தோலிக்க கிறித்துவ தேவாலயங்களில் செய்யப்படும் கிரியைகளாகும். அவை தென்னிந்திய ஆலயங்களிற் செய்யப்படும் கிரியைகளை ஒத்தவை. கி. மு 900-த்தில் வாழ்ந்த சாலமன் எருசலேமிற் கட்டிய யேகோவாவின் கோயிலும், அங்குச் செய்யப்பட்ட கிரியைகளும் இன்றும் இந்திய நாட்டில் காணப்படுவன, நடைபெறுவன போன்றனவே.

மூல மந்திரம்

முற்கால மக்கள் கடவுளின் பெயரைச் சொல்லமாட்டார்கள். அப்படிச் சொல்ல நேர்ந்தால் புனைபெயர்களாகச் சொல்வார்கள். அவை அருமையாக எழுதிக் காட்டப்படும். இன்றும் நாம் பெரியவர்களின் பெயரை அவர்கள் முன்னிலையிற் கூறுவதில்லை. மனைவி, கணவனின் பெயரைக் கூறமாட்டாள். மைந்தன் தந்தையின் பெயரைச் சொல்லி அழைக்கமாட்டான். யேகோவாவின் பெயர் ஒரு போதும் மக்களாற் சொல்லப்படவில்லை. அவ்வாறு சொல்பவர்களைத் தண்டிக்கும் சட்டம் இருந்தது. மறைவாக ஒருவரால் காதிற் சொல்லிக் கொடுக்கப்படும் கடவுளின் பெயரே மூல மந்திரமாகக் கருதப்பட்டது. இன்றும் தீக்கை

Koviloor Academy

யில் சொல்லிக் கொடுக்கப்படுவது கடவுளின் பெயரேயாகும். இவ்வழக்கிலேயே பழைய தமிழ் நூல்களில் சிவன் என்னும் பெயர் காணப்படவில்லை. சிவனைக் குறிக்க நேரும்போது சில புனை பெயர்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. யேகோவாக் கடவுளின் பெயரும் பிறிதோர் பெயரால் குறிக்கப் பட்டு வந்ததெனத் தெரிகின்றது.

விழாக்கள்

அரசனது பெருநாட்களில் பெரிய விருந்துகளும் பொழுது போக்குக்களும் நடப்பது வழக்கம். அப்பொழுது நாடு நகரங்களிலுள்ள மக்களெல்லோரும் வந்து கூடுவார்கள். பெரிய விருந்து கொண்டாடப்படும்; விருந்துக்குப் பின் அரசன் நகர் வலம் வருவான். மக்கள் தமது வீட்டு வாயில்களில் பந்தரிட்டுத் தோரணம் தூக்கி மரியாதை செய்து மாலை அணிதல், பட்டுச் சாத்துதல், ஆலத்தி எடுத்தல் போன்ற சிறப்புக்கள் செய்வார்கள். அரசனுக்கு முன்னால் அவனது சீர்த்திகள் எழுதப்பட்ட விருதுகள் எடுத்துச் செல்லப்படும். கொடி குடை ஆலவட்டம் முதலியனவும் கொண்டு செல்லப்படும். அரச குடும்பத்தினரும் பெருமக்களும் அரசனைச் சூழ்ந்திருப்பார்கள். ஆடல் மாதரும் பாடல் மாதரும் பாடியும் நடித்தும் செல்வர். பல்வகை வாத்தியங்கள் முழங்கும். அரசன் வீதிவலம்

Koviloor Academy

வருதற்கு முன் அரசன் தனது போர் வீரன் ஒருவனை அனுப்பி அரசன் உலாவரும் செய்தியை மக்களுக்கு அறிவிப்பான். அப்பொழுது மக்கள் வீதிகளைப் பெருக்கி நிறைகுடம் முதலியவைகளை வைத்து அரசனை எதிர் கொள்ள ஆயத்தமாய் இருப்பார்கள். இவ்வகைச் சடங்குகளை யெல்லாம் கோயில் விழாக்களில் நாங்கள் காணலாம். முற்கால விழாக்களில் விருந்தே முக்கியமுடையதாக விருந்தது.

கோயிலிற் புராணம் படித்தல்

அரசர் சபைகளில் புலவர்கள் இருந்தார்கள். அவர்கள் அவ்வரசரின் புகழ்களை எல்லாம் முறையே எழுதி வைத்திருந்தார்கள். விழாக் காலங்களில் அல்லது சிறப்புக் காலங்களில் அவர்கள் அவ்வரசனதும் அவன் முன்னோரதும் புகழ்களை எல்லாம் அங்குக் கூடியிருக்கும் மக்கள் கேட்கும்படி படிப்பார்கள். இவ்வழக்கை ஒப்பவே ஆலயங்களிலும் அங்கு எழுந்தருளியிருக்கும் கடவுளின் புகழைக் கூறும் புராணங்கள் படிக்கப்படலாயின. இப்புராணங்கள் பெரும்பாலும் கடவுளையும் தம்மையும் அரசர் பெருமக்களையும் தொடர்பு படுத்தி எழுதப்பட்டனவாகும். இவைகளை நோக்கும்போது பழைய மரபுகள் எவ்வாறு ஆலயங்களிற் காப்பாற்றப்பட்டுள்ளன என்பது நமக்கு நன்கு விளங்கும்.

Koviloor Academy

தேவடியாள்

பழமை தொட்டு ஆலயங்களில் தேவடியாள் இருந்து வருதலைக் காண்கின்றோம். தேவடியாளின் வேலை கோயிலைப் பெருக்குதல், மெழுக்கிடுதல் போன்ற வேலைகளல்ல. கோயிலில் ஆடிப் பாடுவதே. முற்கால அரசரின் அரண்மனைகளில் ஆடல் பாடல்களில் வல்ல பெண்கள் இருந்தார்கள். அவர்கள் அரசனுக்கு முன்னல் நின்று ஆடிப்பாடி அவனை மகிழ்விப்பார்கள். அவ்வழக்கைப் பின் பற்றியே கோயில்களில் தேவடியாளை வைக்கும் வழக்கு உண்டாயிற்று.

கடவுள்

இவ்வளவும் சமயம் எப்படித் தோன்றி வளர்ச்சி அடைந்ததென்பதைப் பற்றிக் கூறினேம். அவைகளில் வரலாறு சம்பந்தம் காணப் படுகின்றதே அன்றி மெய்யறிவு சம்பந்தமான கருத்துக்கள் பெரிதும் காணப்படவில்லை. ஞாயிற்றுக் கடவுளை முழுமுதற் கடவுள் எனக் கொண்டு வழிப்பட்ட மக்கள் ஞாயிற்றுக்கு ஒளியைக் கொடுப்பதும் ஞாயிற்றை உண்டாக்கியதும், இவ்வுலகத்தையும் அசைவுள்ள அசைவில்லாப் பொருள்களையும் இயக்குவதுமாகிய ஒரு பெரிய ஆற்றல் இருப்பதை உணர்ந்தார்கள். அவ்வாற்றல் எவ்வகையினது என்று அறிய மக்கள் நீண்ட காலம் முயன்று வந்

Koviloor Academy

தார்கள். அவர்களால் அதனை இன்ன தன்மையினது என்று அறிய முடியவில்லை. ஆகவே அவர்கள் அப்பேராற்றலுடைய பொருளுக்கு உள்ளத்தைக் கடந்தவன் என்னும் பொருளில் கடவுள் என்றும், எல்லாவற்றையும் இயக்குபவன் என்னும் பொருளில் இயவுள் என்றும் பெயரிட்டு வழங்கினார்கள். தமிழ் மக்கள் பேராற்றலுடைய பரம்பொருளுக்குப் பெயராக இட்டு வழங்கிய பெயர்கள் அவர்கள் எவ்வளவு மெய்யறிவு பெற்று விளங்கினார்கள் என்பதைக் காட்டுவனவாகும். மற்றை மொழியில் கடவுளைக் குறிக்க வழங்கும் பெயர்கள், தந்தை, அரசன், தலைவன், ஒளியுடையவன், நல்லவன் (God = Good) என்பன போன்ற பொருள் தருவனவாகும். அரப்பா மொகஞ்சதரோ என்னும் ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட பழைய நகரங்களிற் கண்டுபிடிக்கப்பட்ட முத்திரைகளில் கடவுள் என்னும் பெயர் காணப்படுகின்றது. இதனால் தமிழ் மக்கள் மிக மிக முற்காலத்திலேயே மெய்யறிவு மிக்கவர்களாய் விளங்கினார்கள் என்பது ஐயமறப் புலனாகின்றது. கடவுள், உள்ளத்தைக் கடந்தவர் என்னும் கருத்து மாத்திரமல்லாமல் அவர் உயிர்களுக்கெல்லாம் தலைவர் (பசுபதி) என்னும் கருத்தும் அக்கால மக்களிடையே தோன்றியிருந்தது. மொகஞ்சதரோ முத்திரை ஒன்றில் மூன்று முகமுடைய ஒரு கடவுள் யோகத்தில் வீற்றிருக்கின்றார். அவரைச் சூழ்ந்து, யானை, மாடு, புலி, மான், காண்டாமிருகம், முதலை முதலிய விலங்குகள்

Koviloor Acadamy

காணப்படுகின்றன. இதனால் அக்கால மக்கள் கடவுள் பசுபதி என்னும் கருத்தை உருவாக அமைத்துக் கடவுளை வழிபட்டார்கள் எனத் தெரிகின்றது.

உயிர்

தமிழ் மக்கள் தமது நெடுங்கணக்கிலுள்ள எழுத்துக்களை இருவகையாகப் பிரித்து அவைகளுக்கு உயிர், மெய் எனப் பெயரிட்டார்கள். இவ்வுடம்பையும் அதனில் உறையும் உயிரையும் பற்றிய ஆராய்ச்சியும் அதனாற் பெறப்பட்ட மெய்யறிவும் மக்களிடையே மிக்கிருந்தமையினாலேயே பழைய மக்கள் எழுத்துக்களுக்கு உயிர் என்றும் மெய் என்றும் பெயரிட்டார்கள் என நமக்கு நன்கு விளங்குகின்றது. உயிர் தானே இயங்கவல்லது. மெய் உயிர் இல்லாமல் இயங்கமாட்டாதது; உயிரும் மெய்யும் சேர்ந்து ஒன்றுபோல இயங்கவல்லன என்பன போன்ற கருத்துக்கள் மிக மிக முற்காலத்திலேயே தமிழ் மக்களிடையே தோன்றியிருந்தமை மிக மிக வியக்கத் தக்கதாகும்.

வினை

மக்கள், தாம் புரியும் நல்வினை தீவினை காரணமாக அவர்கள் பலவகைப் பிறவிகளை அடைகின்றார்கள் என மிகப் பழங்காலந்தொட்டே நம்பி வருகிறார்

Koviloor Academy

கள். ஆகவே அவர்கள், செயலைக் குறிப்பதாகிய சொற்களின் கூட்டங்களுக்கு வினை எனப் பெயரிட்டுள்ளார்கள். வினையினால் பல பிறவிகள் உண்டாகும் என்னும் கருத்துக்கேற்பப் பெயரை வேறுபடுத்துவது என்னும் பொருளில் வேற்றுமை என்னும் சொல் இலக்கணத்திற் பயன்படுத்தப் பட்டுள்ளது.

தமிழரின் சமயம் உலக சமயம்

மக்கள் அறிவால் வளர்ச்சி எய்தி மெய்யறிவு பெற்றபோது அவர்கள் இறை, உயிர், உலகம் என்னும் முப்பொருள்களைப்பற்றி ஊன்றி ஆராய்ந் தார்கள். அவர்களுக்குப் பல உண்மைகள் வெளியாயின. அக்கருத்துக்கள் மிகப் பழங்காலந் தொட்டு தமிழறிஞர் மூலம் தலைமுறை தலைமுறையாக வந்தன. முற்காலத்தில் புதிதாகக் கண்டுபிடிக்கும் கருத்துக்களோடு, கைத்தொழில்களோ மருந்து முறைகளோ எல்லோருக்கும் வெளியிடப் படுவதில்லை. அவைகளை அறியவேண்டும் எனத் தாகங்கொண்டு குருவிடத்தில் நீண்ட நாள் பழகிய பின்னரே அவர்களுக்கு அவை வெளியிடப்படும். பக்குவமில்லாதவர்களுக்குச் செய்யப்படும் உபதேசம் பன்றிகளுக்குமுன் இடப்படும் முத்துக்களை ஒத்தன என்று கிறித்துநாதரும் கூறியுள்ளார். அவ்வாறு தலைமுறை தலைமுறையாக வந்ததே இன்று சைவசித்தாந்த ஞானம் என வழங்கும்

Koviloor Academy

சமய உண்மைகளாகும். டாக்டர் போப் என்பார், சைவசித்தாந்தம் என்பது பழந்தமிழரின் அறிவிற் பூத்துக் காய்த்துப் பழுத்த பழம். அதுவாலாற் றுக் காலத்திற்கு முன்னமே தமிழர்களால் அறியப் பட்டிருந்தன என்று கூறியுள்ளார்.

கடவுள், உலகம், உயிர் என்னும் முப்பொருள் களைப் பற்றி ஆராயப்படும் உண்மை அறிவு, எல் லா மதத்தினருக்கும் பொதுவானவை. ஆகவே தமிழர் சமயம் உலக சமயமாகவுள்ளது என மேல் நாட்டறிஞரும் கூறியுள்ளார்கள்.

பழந்தமிழரின் சமய நூல்கள்

தமிழ் மக்கள் பலருக்குத் தமது சமயநூல் எவை என்று தெரியாது. இருக்கு, யசுர், சாமம், அதர் வணம் என்னும் நான்கு வேதங்களே தமது சமய நூல்கள் எனத் தமிழ் மாணவருக்குப் பள்ளிகளிற் சொல்லிக் கொடுக்கப்படுகின்றது. சொல்லிக் கொடுப்பவர்களும், சொன்னதைக் கேட்பவர் களும் ஒருபோதும் வேதத்தைப் பார்த்ததில்லை. இவ்வாறே ஆராய்ச்சியின்றிப் பொய்யான இக் கருத்துத் தமிழர்களிடையே பரவியுள்ளது. அவ் வேதங்கள் கடவுளாற் சொல்லப்பட்டவை எனவும் அவர்கள் நம்பிவருகின்றார்கள். இன்று போலவே முற்காலத்தும் வேதங்கள் கடவுளாற் செய்யப்

Koviloor Acadamy

பட்டன என்று ஆராய்வின்றி மக்கள் நம்பி வந்தார்கள். அக்காலத்தில் வேதம் மிகவும் மறைவாக இருந்துவந்தது. சமயகுரவர்கள், சித்தாந்த சாத்திரங்களைச் செய்தோர், ஆறுமுக நாவலர் முதலியவர்கள் எல்லாரும் அவைகளைக் கடவுள் செய்தார் என்றே நம்பிவந்தார்கள். வேதங்களை யாரும் கண்டதில்லை. மேல் நாட்டு மக்கள் இந்தியாவை அடைந்தபின் அவர்கள் சமக்கிருதத்தைப் பயின்றூர்கள். சமக்கிருதமும் பழைய செர்மன் மொழியும் மிக உறவுடையனவாய்க் காணப்பட்டமையின் முன்னறியப்படா திருந்த மொழிகளைப்பற்றியும், சாதிகளைப்பற்யும் பல உண்மைகள் தெரியவந்தன. ஆகவே மேல் நாட்டறிஞர் பலர் வடமொழியைப் பயின்று பெரும் பொருட் செலவில் வடமொழி வேதங்களைத் திரட்டி அவைகளை மொழிபெயர்த்து அச்சிட்டுள்ளார்கள். அதன்பின்பே இதுவரையும் மூடுமந்திரமாயிருந்த வேதங்கள் என்றுல் என்ன என்று மக்கள் அறிய வந்தார்கள். வேதங்கள் என்பன, இரசிய நாட்டின் தென்கோடியினின்றும் இந்தியநாட்டை இற்றைக்கு நாலாயிரம் ஆண்டுகளுக்குமுன் அடைந்த ஆரிய மக்கள், தமது ஆக்கம் வேண்டித் தாம் வழிபட்ட கடவுளரைப் பாடிய பாடல்களாகக் காணப்படுகின்றன. கடவுள், உலகம், உயிர் போன்ற முப்பொருள்களை ஆராய்ந்துகூறும் உண்மை அறிவு அதில் சிறிதும் காணப்படவில்லை. வேத பாடல்களைப் பாடியவர்களின் பெயர்கள் காணப்படுகின்றன. ஆரியரின் வேதபாடல்களுக்கும் தமிழர்

Koviloor Academy

சமயத்துக்கும் யாதும் தொடர்பு இல்லை. அவ்வாறு தொடர்பு இருக்கின்றதெனக் கூறினால் அது சைவர்களுக்கு முதல் நூல் கிறிஸ்தவர்களின் விவிலியமறை எனக் கூறுவது போன்றதாகும்.

தமிழரின் சமயநூல்கள் குரு மாணாக்க முறையில் வந்தன என்று கூறினோம். இதற்கு ஆதாரம் தொல்காப்பியம் என்னும் பழைய இலக்கண நூலிற் காணப்படுகின்றது. தமிழ்நூல்கள் மூப்பாலாகச் செய்யப்படுவதே பழைய வழக்கு என்றும், வீட்டுநெறி கூறும் பகுதி நூலாகச் செய்யப்படும் வழக்கில்லை என்றும் ஓரிடத்திற் கூறப்பட்டுள்ளது. ஆரியரின் வேதங்கள் கடவுளாற் செய்யப்பட்டன என்னும் பொய்யான கதை பரவியிருந்த காலத்தில் அக்கருத்துத், தேவார திருவாசகம் சித்தாந்த நூல்களிலும் புகுந்துள்ளன எனக் கூறினோம். சிலர் மேற்கூறிய நூல்களிலுள்ள சிலவாக்கியங்களை வைத்துக் கொண்டு அவை கடவுளாற் செய்யப்பட்டன என்றே சாதிக்க முன் வருகின்றனர். இன்று வேதங்கள் மறைவாயிருக்கவில்லை; அவைகளிற் பெரும் பகுதிகள் ஐரோப்பிய மொழிகளிலும், தமிழிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. அவைகளைக்கொண்டே வேதங்களின் வரலாற்றை நாம் எளிதில் அறிந்து கொள்ள முடிகின்றது. பழைய சமயநூல்கள் இல்லாமை தமிழருக்குப் பெருங் குறை எனப் பலர் கருதுகிறார்கள். நூல் இல்லாதிருந்தமை குறையாகமாட்டாது. அக் கருத்துக்கள் இருந்து வந்தன என்பதற்குத் தக்க

Koviloor Acadamy

சான்றுகள் இருக்கின்றன. மக்களிடையே தோன்றி வளர்ச்சியடையும் கருத்துக்களே ஒரு காலத்தில் நூல்களாக எழுதிவைக்கப்படுகின்றன. இன்று காணப்படும் சமயநூல்களில் வரலாறு சம்பந்தமாகக் காணப்படும் சில தவறுகளை நாம் அறிந்து அவைகளைப் பொருளெனப் பாராட்டாதொழிதலே ஏற்றதாகும்.

பூசாரி வேறு ஆசிரியன் வேறு

கோயிலிற் சடங்குகள் புரிவோன் பூசாரி எனப்பட்டான். அவனே புரோகிதனுமாயிருந்து, அரசன், பெருமக்கள், பொதுமக்களின் சமயச் சடங்குகளை நடத்தி அதற்குக் கூலி (தக்கணை) பெற்றான். ஆசிரியன் அல்லது ஆசாரியன் என்பவனே குரு எனப்பட்டான். 'இவன் உண்மை ஞானம் பெற்றவனாயிருந்தான். இவன் உண்மை ஞானத்தைப் பெறும் தகுதியுடையவர்கள் தன்னை வழிபட்டு அதனை அருளும்படி பலகாலும் கேட்ட போது அதனை அருளினான். இவன் கோயிற் பூசை செய்பவனல்லன். பிற்காலங்களில் குரு என்னும் பெயர் பூசாரிக்கும் வழங்குகின்றது.

பார்ப்பார்

பார்ப்பார் என்போர் கோயில்களை மேற் பார்ப்பார். அவர்கள் கோயிற் பூசாரிகளு மாவர். இவ்வாறு கோயிற் பூசாரிகளின் குடும் பங்களில் மக்கள் பெருகினார்கள். அவர்களும் பார்ப்பார் எனப்பட்டனர். அவர்கள் கோயில் களிற் கிடைக்கும் வருவாய்களைத் தமது ஊதிய மாகக் கொண்டு வாழ்ந்தனர். அவர்கள் பிற மக் களுக்கு மணச்சடங்கு, பிணச்சடங்கு, சமயச் சடங்குகளையும் செய்து உணவும் தக்கணையும் பெற்றுவந்தனர். அவர்கள் கோயில்களைச் சுற்றிக் குடியிருந்தார்கள். அவர்கள் தாங்களே சமயத் துக்கு அதிகாரிகள் எனக் கருதினார்கள். மக்க ளிடையும் அவ்வகையான நம்பிக்கை இருந்துவந் தது. மந்திரம், சோதிடம் போன்ற சிலவற்றைக் கொண்டும் அவர்கள் மக்கள் தம்மை நாடி வரும் படி செய்தார்கள்.

பிராமணர்

ஆரிய மக்களின் வேள்விகள் செய்யும் விதி களைக் கூறும் நூல்கள் பிராமணம் எனப்பட்டன. அந்நூல்களைப் பயின்று வேள்விக் கிரியைகளைச் செய்து தக்கணை பெற்றோர் பிராமணர் எனப்பட் டார்கள். காலப்போக்கில் இக்குடும்பங்கள் பெரு கின. அவர்கள் எல்லோருக்கும் ஓரிடத்தில் பிழைப்

Koviloor Academy

புக் கிடைப்பது அரிதாயிற்று. ஆகவே அவர்கள் தென்னாட்டுக்குப் பிழைக்க வந்தனர். வேள்வி செய்வதால் இம்மையில் செல்வமும் நல்வாழ்வும் உண்டாகும் என்று கூறி அவர்கள் அரசரை யாகங்கள் செய்யும்படி தூண்டினர். பலர் அவர்கள் கூற்றுக்களில் நம்பிக்கை கொண்டு யாகங்கள் செய்தனர். அதனால் பிராமணருக்கு அரசரின் மதிப்பும், செல்வமும் உண்டாயிற்று. அவர்கள் பார்ப்பன வகுப்பினரிடையே திருமணக் கலப்புடையராயினர். ஐரோப்பியன் ஒருவன் ஓர் இந்தியக் குடும்பத்தில் திருமணக் கலப்பு வைத்தபோது அக் குடும்பத்தினர் எல்லோரும் தம்மை யூரேசியர் எனக் கூறி மேல்நாட்டு உடைகளை அணிந்தனர். இவ்வகை நிகழ்ச்சியைத் தேஸ்ரன் என்பார் தென்னிந்திய குலங்களும் குடிகளும் என்னும் தனது நூலிற் கூறியுள்ளார். இவ்வாறு பார்ப்பனக் குடும்பங்கள் பிராமணக் குடும்பங்களாயின. இவ்வாறு பிராமணராகிய பார்ப்பனர், யூரேசியர் ஆங்கில மொழியை வழங்குவதுபோலச் சமக்கிருதம் தமது தாய் மொழி எனக்கருதிப் பயின்றனர். பார்ப்பனர் பிராமணராகிக் கோயிற் பூசாரிகளாயிருக்கத் தொடங்கிய காலத்தில் சமக்கிருதம் சமயமொழியாக ஆலயங்களில் நுழைந்தது. பிராமணர், சமயத்தைக் கைப்பற்றிக்கொண்டு அரசாங்கத்திலும் அரசர் உதவியால் உயர்ந்த பதவிகளில் இருந்தனர். இவ்வாறு பிராமணர் ஆதிக்கம் நீண்ட காலம் தமிழ்நாட்டில் இருந்து வருவதாயிற்று.

Koviloor Academy

இவர்கள் ஆலயங்களோடு மாத்திரம் நின்று விடவில்லை. அரசாங்க வட்டத்திலும் பதவிகளைப் பெற்று அதிகாரம் அடைந்தார்கள். அவர்கள் அரசரா யிராவிட்டாலும் அரசரையும் அரசாங்கத் தையும் சேர்த்து ஆட்டிவைத்தார்கள். மகமதி யரும் பிராமணரும் நேர்மாறான கருத்துடையவர் கள் என்பது எவரும் அறிந்ததே. அவ்வகையான அக்பரின் ஆட்சியில் பிராமணனே மந்திரியா யிருந்தானென்றால் நாம் அதிகம் கூற வேண்டிய தில்லை. இன்றும் பிராமணரும் பிராமணரல்லாதா தாரும் அதிகாரத்துக்காகப் போராடி வருகின்ற னரன்றோ?

சமய நூல்கள் தோன்றுதல்

ஆரியர் இந்திய நாட்டை அடைந்தபோது அவர் கள் அங்கு வாழ்ந்துகொண்டிருந்த ஆதிக் குடிகளை எதிர்த்துப் போராட வேண்டியிருந்தது. இவ்விரு கட்சியர்களுக்கிடையில் போர்கள் நிகழ்ந்தன. முற்காலங்களில் பாடல்கள் மந்திரங்களாகக் கருதப் பட்டன. மக்கள் வேடராகக் குகைகளில் வாழ்ந்த காலத்துஅவர்கள் குகைகளின் சுவர்களில் விலங்கு களை மக்கள் வேட்டையாடுவது போன்ற ஓவியங் கள் எழுதியிருக்கிறார்கள். அவ்வோவியங்கள் அழகுக்காக எழுதப்படவில்லை. அவ்வாறு ஓவியம் வரைந்தபின் வேட்டைக்குச் சென்றால் உடனே விலங்குகள் வேட்டையாடக் கிடைக்கும் என்பது

Koviloor Acadamy

அக்கால மக்களின் நம்பிக்கை. இன்றும் பிற்போக்கான மக்களிடையே தமக்கு ஆபத்து விளைக்கக் கூடிய விலங்குகளின் பெயர்களைச் சொல்லுதலும் நினைத்தலும் ஆகாதென்னும் வழக்கம் இருந்து வருகிறது. நினைத்தால் அவ்விலங்கு தூரத்தில் வரும்; சொன்னால் கிட்டவந்து ஆட்களைக் கொன்றுவிடும் என்று அவர்கள் நம்புகிறார்கள். இவ்வாறு அவர்கள் புலி சிங்கம் முதலியவைகளின் பெயர்களைச் சொன்னமையால் அவை வந்து மக்களைக் கொன்றதைப் பற்றிய பழங் கதைகள் அவர்களிடையே வழங்குகின்றன. இவ்வகையான அடிப்படையிலிருந்தே பில்லி சூனிய வித்தைகள் தொடங்கின. ஆபிரிக்காவின் சில பகுதிகளில் ஒருவனுடைய உண்மையான பெயர் மிக மறைவாக வைத்துக் கொள்ளப்படும். இன்னொரு பெயரால் அவன் அறியப்படுவான். பில்லி சூனியக்காரர் அவனுடைய பெயரைச் சொல்வதால் அவனுக்குத் தீங்கு உண்டாகின்றது என்னும் நம்பிக்கை இருந்து வருகிறது. போருக்குச் செல்லும் பொழுது, எதிரியை, வெட்டுவோம், குடலை எடுப்போம் என்பன போன்ற பாடல்களைப் பாடுவதும் ஒருவகை மந்திரவித்தையாகும். இதுபோன்ற கருத்துக்கள் உலகில் எல்லா மக்களிடையும் பரவியிருந்தது. ஆரியமக்கள் ஆதிக்குடிகளோடு போராட வேண்டியிருந்தமையில் அவர்கள் ஆதிக் குடிகளை வெல்லும் வல்லமைபெற வேண்டிப் பல பாடல்களைப் பாடினார்கள். அப்பாடல்கள்தொகுக்கப்

Koviloor Academy

பட்டுவேதங்கள் எனப்பட்டன. பின்பு வியாசர் என்னும் பரதவகுப்பினராகிய தமிழர் வேதங்களை நான்காகப் பிரித்தார். வெவ்வேறு வகையான கிரியைகளிற் பயன்படுத்தும் பொருட்டுக் கையாளப் பட்ட பாடல்கள் வெவ்வேறு பெயர்களைப் பெற் றன. பெரும்பாலும் ஒரு வேதத்திற் காணப்படும் பாடல்கள் மற்றைய வேதங்களிலும் காணப்படு கின்றன.

வேதங்களில் பல தமிழ்ச் சொற்கள் காணப் படுகின்றன. இதனால் தமிழர் சிலர் வேதபாடல்கள் சிலவற்றைச் செய்திருக்கலாமென்று கருதப்படு கின்றது. வேதகால ஆரியர் மறுபிறப்பைப் பற்றி அறிந்திருக்கவில்லை. மரணத்துக்குப் பின் உயிர் கள் நித்திய சுவர்க்கம் அல்லது நரகத்துக்குச் செல்கிறார்கள்; இவ்வுலகத்தில் மக்களாற் செய்யக் கூடிய மேலான செயல் யாகம். அதனால் மனிதன் மறு உலகில் உயர்ந்த பதவியில் இருக்கலாம் என்பன ஆரியர் வேதங்களின் மேலான கொள் கைகளாகும்.

வேதங்களில் சிவவழிபாடு காணப்படவில்லை. இருக்கு வேதத்தில் ஒரு பகுதியாகிய பத்தாம் மண்டிலத்தில் உருத்திரனைப்பற்றிக் கூறப்பட்டுள் ளது. உருத்திரன் என்னும் பெயர் கோபிக்கின்ற வன் என்னும் பொருளில் இடப்பட்டு வழங்கிற்று. அது, பயங்கரமான அவர்களின் இடிக்கடவுளுக்குப் பெயராக வழங்கிற்று. பின்பு அக்கடவுள் சிறிது

Koviloor Acadamy

சிறிதாக மாறுபட்டுச் சிவன் கடவுளோடு ஒன்ருக்கக் கருதப்பட்டது. அப்பொழுது உருத்திரன் என்பதற்குச் சிவந்தவன் என்னும் பொருள் கொடுக்கப்பட்டது. இருக்கு வேதத்தின் பத்தாம் மண்டிலம் பிற்காலத்திற் சேர்க்கப்பட்டதென்பதும், சிவன் தமிழரின் கடவுளென்பதும் மேல்நாட்டு ஆராய்ச்சி வல்லார் கருத்துக்களாகும். உருத்திரர் வேதகாலத்தில் ஆரியரின் சிறுதெய்வங்களுள் ஒன்ருக இருந்தார். பிற்காலங்களில் அக்கடவுள் சிறிது சிறிதாக உயர்ந்த கடவுளாகக் கருதப்பட்டுப் பிராமண காலத்துத் தலைமைக் கடவுளாகக் கொள்ளப்படுவாராயினர். அப்பொழுது அவர் உருத்திரசிவனென்னும் பெயரையும் பெற்ருர். வேதமதமென்பது உயிர், உலகம், இறை என்னும் முப்பொருள் உண்மைகள் தோன்ருக் காலத்தில் ஆரியமக்களிடையே வழங்கிய சமயமாகும்.

தமிழரின் சமயக் கருத்துக்கள் நூல் வடிவில் வந்த வரலாறு.

தமிழில் வீட்டுநெறி கூறும் பகுதி நூலாகச் செய்யும் வழக்கு இல்லை என்றும், அது குரு மாணுக்க முறையில் கேட்கப்பட்டு வந்தது என்றும் முன் ஓரிடத்திற் கூறினேம். ஆரிய மக்கள் நீண்ட காலம், மறு பிறப்பு, உயிர், வினை, கடவுள் முதலியவைகளைப்பற்றிய உண்மைகளைச் சிறிதும்

Koviloor Academy

அறியாதிருந்தார்கள். அவர்கள் தேவர்களுக்கு மிருகங்களை வெட்டிப் பலியிடுவதாலும், உணவுகளைப் படைப்பதினுலும் உயர்ந்த பேற்றை அடையலாமென நம்பி வந்தார்கள். புரோகிதராயிருந்து வேள்விகளைச் செய்துவரும் பிராமணர் சிலருக்கு வேள்விகளில் நம்பிக்கை உண்டாகவில்லை. உண்மை ஞானத்தை அறிந்தவர்கள் பற்பல இடங்களில் இருப்பதாக அவர்கள் கேள்வியுற்ருர்கள். அவர்களிற் சிலர் உண்மை ஞானத்தைத் தேடிப் பற்பல இடங்களுக்கு அலைந்து திரிந்தார்கள். இவ்வாறு சென்றவர்களுள் யாக்ஞவல்கி என்னும் பிராமணர் முதன்மையானவர். அவர் சனகன் என்னும் தமிழ் அரசனின் பாதங்களின் கீழ் இருந்து அவனிடம் உண்மை ஞானங்களைப் பயின்ருர். ஒரு நாட்டி லிருப்பவர் இன்னெரு நாட்டுக்குச் சென்று தமது நாட்டில் அறியப்படாத செயல்களைக் கண்டால் அவைகளைத் தமது நாட்டு மக்கள் அறியும்படி எழுதிவைத்தல் இயல்பு. யாக்ஞவல்கி என்னும் பிராமணர் தாம் கேட்டு அறிந்த உண்மை ஞானங்களை வடமொழியில் எழுதி அதற்கு உபநிடதம் எனப் பெயரிட்டார். உபநிடதம் என்பதற்கு 'இரகசியம்' என்பது பொருள். உண்மை ஞானத்தை அறிவதில் தாகம் கொண்டிருந்த பலர் உபநிடதங்களைப் பயின்றனர். உபநிடதங்கள் யாகங்களை ஏற்றுக்கொள்ளவில்லை.

உபநிடத உண்மைகள் அறியப்பட்டபோது ஆரணியகங்கள் என்னும் நூல்கள் பிராமணரால்

Koviloor Acadamy

செய்யப்பட்டன. அவைகளில் அவர்கள் தாம் செய்துவரும் வேள்விச் சடங்குகளுக்கு வேறு பொருள்கள் கற்பித்துக் கூறுவாராயினர். பின்பு உபநிடதங்களும் ஆரணியகங்களும் வேதங்களிற் சேர்க்கப்பட்டன. உபநிடதங்கள் வேதமுடிபு எனப்பட்டன. பிராமணர் அறியாதிருந்த கருத்துக்களை நன்கு விளக்குவதற்குத் தமிழ் அறிஞர் பலரும் அவர் மொழியில் உபநிடதங்களைச் செய் திருத்தல் கூடும்.

வேத மதத்துக்கு மாறான சமயங்கள் தோன்றுதல்

உபநிடதக் கருத்துக்களையே பொருளாகக் கொண்டிருந்த மக்கள் ஆரியரின் வேத மதத்தைக் கண்டித்து வந்தனர். யாகங்களால் பயன் இல்லை என்றனர். அக்காலத்தில் திராவிட மரபில் தோன்றிய கபிலர் என்பார் சாங்கிய மதக் கொள்கைகளை வெளியிட்டார். பின்பு இவர் மரபில் வந்த சித்தார்த்தர் என்பார் புத்த சமயக் கருத்துக்களை வெளியிட்டார். வேதாந்த சூத்திரங்கள் என்பன வியாசராற் செய்யப்பட்டன வென நம்பப்பட்டு வருகின்றன. உண்மையில் அவை கி. மு. நாலாம் நூற்றாண்டு வரையில், புத்த சைன மதக்கொள்கைகள் பரவியபோது தென்னாட்டினராற் செய்யப்பட்டனவென்று ஆராய்ச்சிவல்லார் கூறுகின்றனர்.

Koviloor Academy

சமய உண்மைகளை விளக்கும் நூல்கள் திருமூலர் காலம் வரையில் தமிழிற் செய்யப்படவில்லை எனத் தெரிகின்றது. திருமூலரின் காலம் கி. பி. ஐந்தாம் நூற்றாண்டு வரையில். அவர் தாம் கூறும் கருத்துக்கள் ஆகமங்களில் உள்ளன என்று கூறுகின்றார். இவ்வாகமக் கருத்துக்கள் நீண்ட காலந் தொட்டு உபதேச முறையில் வருவன. அவைகளைக் கேட்டறிந்த பிராமணர், அவைகளை வடமொழியில் எழுதிவைத்தனர். பின்பு அவர்கள் அவைகளிற் பல மாற்றங்களும் செய்துள்ளார்கள். தமிழரின் சமய நூல்கள் எனப்படும் உபநிடதங்கள் ஆகமங்கள் என்பன வடமொழியில் காணப்படுவதற்குரிய காரணம் நமக்கு இப்பொழுது நன்கு விளங்குகின்றது. இவ்வுண்மைகளை மக்கள் நன்கு அறியாதிருந்தபோது பிராமணர், அவை கடவுளாற் சொல்லப்பட்டவை என்றும், கடவுள் உரையாடும் மொழி சமக்கிருதம் என்றும் கூறி மக்களை நம்பச் செய்தனர்.

சமக்கிருதம் கடவுள் மொழியாதல்

சமக்கிருதம் கடவுள் மொழி என மக்கள் நம்பத் தலைப்பட்டபோது, அவர்கள் தம்மை உயர்வு படுத்தவும், தமது கருத்துக்களை மக்கள் நம்பச் செய்யவும்வேண்டிப் பல நூல்களை அம்மொழியில்

Koviloor Academy

எழுதி, அவை சிவபெருமானால் சொல்லப்பட்டவை என்றோ, விட்டுணுவாற் சொல்லப்பட்டன என்றோ கூறினர். நாளடைவில் கோயில்களுக்குப் புராணங்கள் எழுதப்பட்டன. அப்பொழுது புராணம் பாடுவோர் தாம் யாதோ வடமொழிப் புராணத்திலுள்ளதைத் தமிழில் பாடுவதாகவே கூறிவந்தனர். சமயத் தொடர்பான நூல்களோ, பெயர்களோ வடமொழியில் இருத்தல் வேண்டும் என்னும் கருத்து வலியுறுவதாயிற்று. அக்காலத்தில் தமிழ்ப்பெயர் பெற்றிருந்தகோயில்களுக்கெல்லாம் வடமொழிப் பெயர்கள் இடப்படலாயின. இது வியப்புக்குரியதன்று. இரண்டொரு நூற்றாண்டுகளாகக் கிழக்குத் தேசங்களில் நடைபெறும் ஆங்கிலர் ஆட்சியில், பலஇடங்களுக்கும் மக்களுக்கும் ஆங்கிலப் பெயர் வழங்குவதைக் காண்கிறோமன்றோ. பெயரளவில் நிற்கவில்லை; ஐம்பது ஆண்டுகளுக்குமுன் நம்முன்னோர் உடுத்ததுபோல இன்று நாம் உடையுடுக்கவில்லை; அவர்கள் குடுமிவிட்டதுபோல விடவில்லை. ஆங்கில மக்கள் போல உடையுடுத்துச் செல்வதே மதிப்புக்குரியதென்று கருதப்படுகின்றது. இவை போன்ற மாற்றம் ஒரு காலத்தில் உண்டாயிற்று; இது மக்கள் உண்மை அறிந்து கொள்ளமுடியாமையினால் உண்டானதாகும். கிறித்துவமதம் இந்நாட்டில் பரவியபோது அவர்கள் தம்மை ஞானிகள் என்றும் மற்றவர்களை அஞ்ஞானிகள் என்றும் கூறினார்கள். இன்று தம்மை அஞ்ஞானிகள் எனக் கூறும் மக்களை நாம் காண்கின்றோம். அஞ்ஞானி என்றால்

Koviloor Academy

கிறித்துவனல்லாதவன் என்று அவர்கள் கருதுகிறார்கள்.

சமக்கிருதம் தெய்வமொழியா?

இன்று ஆலயங்களிலும் சமயக்கிரியைகளிலும் சமக்கிருதம் வழங்குகின்றது. சமக்கிருதச் சொற்றொடர்களைக் கிரியைகளில் உச்சரிப்பதால் ஏதோ பெரியபேறு உண்டாகின்றது என்று மக்கள் நம்பிவருகிறார்கள். கிறித்துவருள் ஒரு பகுதியினர் இலாத்தின் சொற்றொடர்களை அவ்வாறு கருதிவருகின்றனர். முகமதியர் அரபுமொழியை அவ்வாறு கருதுவர். இவைகளில் யாதும் உண்மை இல்லை. சமக்கிருதம் பழையசெர்மன் மொழிக்கு இனமானது. எப்படி அராபியர் இந்திய நாட்டை ஒரு காலத்தில் அடைந்து, இந்திய நாட்டில் சில பகுதிகளைக் கைப்பற்றி ஆட்சி புரிந்து தமது முகமது மதத்தை இந்தியாவிற் பரப்பினார்களோ, அப்படியே சமக்கிருதத்துக் குரியமக்களும் இந்தியாவுக்கு அயலிலிருந்து வந்து, இந்தியாவின் சில பகுதிகளை ஆட்சிபுரிந்து தமது மதத்தை மக்களிடையே பரப்பினார்கள். முகமதியர், கிறித்தவர்கள் தாம் பிறமதத்தினர் எனக்கூறி மதசம்பந்தமாக நம்மினின்றும் விலகியிருக்கிறார்கள். பிராமணமதத்தினரோ தமிழரோடு அணைந்து தமிழர் வணக்கங்கள் சிலவற்றைத் தாம் கைக்கொண்டு தாமும் தமிழர் சமயத்தைத் தழுவுபவர்கள் என நடித்துத் தாம்

Koviloor Academy

தமது தாய்மொழி எனக் கொள்ளும் சமக்கிருதத்தைச் சமயத்தில் புகுத்துவாராயினர். பிராமண வகுப்பினர் அரசியல் துறைகளில் உயர்ந்த பதவிகளில் இருந்தமையாலும், அரசர் அவர்கள் கூறுவதை நம்பினமையினாலும் அவர் துணையைக் கொண்டு பொதுமக்கள் கருத்துக்களுக்கு மாறான பல மாற்றங்கள் தமிழ் நாட்டிற் கொண்டுவரப் பட்டன. அவைகளில் ஒன்று வடமொழியைச் சமய மொழியாக்கியது. மக்கள் எந்த மொழியை வழங்குகின்றார்களோ அம்மொழியே சமயமொழியாகவும் இருத்தல் வேண்டும். தமிழனுக்குச் சமக்கிருதம் சமயமொழியாக இருக்கவேண்டுமெனக் கூறுதல் எப்படி இருக்கின்றதென்றால், தமிழனுக்கு இந்துத்தானிப் பாட்டுத்தான் பிடிக்கும்; தமிழ்ப் பாட்டுப் பிடிக்காது என்று கூறுவது போல் என்க. இதனை மெய்யென்றே மக்கள் சிலகாலம் நம்பி வந்தார்கள். இன்று அது தவறு என்று விளங்குகின்றது. தமிழனுக்குத் தமிழ்ப்பாட்டே பிடிக்கும் என்பதே சரி என்று முடிவாயிற்று. இதனையொப்பவே தமிழனுக்குத் தமிழே சமயமொழியாக வேண்டும். தமிழனுக்குச் சமயமொழி சமக்கிருதமாயிருக்க வேண்டுமாயின், ஆங்கிலம் ஏன் இருக்கக் கூடாது என்னும் கேள்வி எழுலாமன்றோ.

Koviloor Academy

தமிழில் வீட்டு நூல்கள் எழுதப்படுதல்

வீட்டு நெறி கூறும் கருத்துக்கள் தமிழில் நூலாகச் செய்யப்படுவது பழைய வழக்கு அன்று என்றும், அக் கருத்துக்களைக் குரு மாணுக்க முறையில் அறிவுறுத்தல் மரபு என்றும் முன் ஓர் இடத்திற் கூறியுள்ளோம். அசோகச் சக்கரவர்த்தி புத்த சமயத்தை உலகில் எங்கும் பரப்புவதில் கருத்துக்கொண்டிருந்தார். அவர், இலங்கை, தென்னிந்தியா, சீனு, பர்மா, ஐரோப்பா, ஆபிரிக்கா முதலிய நாடுகளுக்குப் புத்த குருமாரை அனுப்பிப் புத்த சமயத்தைப் பரவச் செய்தார். புத்த சமயத்தின் தத்துவக் கொள்கைகள் தமிழரின் பழைய தத்துவக் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டனவேனும், அவைகளில் சில கருத்து வேறுபாடுகளும் இருந்துவந்தன. புத்த சமயத்தைப் பின்பற்றிச் சைன மதமும் தென்னிந்தியாவை வந்தடைந்தது. இம்மதத் தத்துவக் கொள்கைகள் சில தமிழரின் பழைய தத்துவக் கொள்கைகளோடு மாறுபட்டன. இவ்வளவு காலமும் தமது சமய உண்மைக் கருத்துகளுக்கு மாறுன வேறு மதக்கொள்கைகள் தென்னுட்டில் வராமையால் அமைதி பெற்றிருந்த தமிழர், தம் சமயக் கருத்துக்களை அழிந்து போகாமல் பாதுகாக்கும்படி முயன்று வந்தனர். அக்காலத்திலேயே திருமூலர் என்னும் தமிழ் அறிஞர்

Koviloor Academy

தோன்றி இவ்வளவு காலமும் குருமாணுக்கமுறை யில் உபதேசிக்கப்பட்டு வந்த சமய ஞானங்களை எல்லாம் தொகுத்துத் திருமந்திரம் என்னும் நூலாகச் செய்தார். மந்திரம் என்பதற்கு மறை என்பதே பொருள். இந்நூலில் மூவாயிரம் பாடல் களே உள்ளன என்பது பழைய ஐதீகம். இன்று திருமந்திரத்தில் மூவாயிரத்துக்கு மேற்பட்ட பாடல் கள் காணப்படுகின்றன. பிற்காலத்தில் சிலர் தத்தம் கருத்துக்களையும் புகுத்திச் சில பாடல் களைச் செய்து சேர்த்துள்ளார்கள்.

சமயாசிரியர்கள் தோன்றுதல்

சமயகுரவர்கள் என்று சைவ சமயத்தவர்கள் கூறுவோர்: மாணிக்கவாசகர், திருநாவுக்கரசர், திருஞான சம்பந்தர், சுந்தரர் என்னும் நால்வ ராவர். மாணிக்கவாசகரே மூவருக்கும் முன் விளங்கினர் என்பது ஐதீகம். கால ஆராய்ச்சி செய்வோர் சிலர் அவர் கி. பி. 9-ம் நூற்றாண்டில் விளங்கியவராகக் கூறுவர். தமிழ் நாட்டில் முதல் புத்தமதமும், பின்பு சைன மதமும் தலையெடுத் திருந்தன என்பதைச் சரித்திர ஆசிரியர்கள் ஒத்துக்கொள்ளுகின்றனர். சைன மதத்துக்கு முன் புத்த மதம் தலை எடுத்திருந்த தென்பதை நாம் ஒப்புக்கொண்டால் மாணிக்கவாசகர் மூவருக் கும் முன் விளங்கியவராவர்.

Koviloor Academy

புத்த மதக் கொள்கைகளும் சைன மதக் கொள்கைகளும் தலை எடுத்த காலத்து அரசரும் அக்கொள்கைகளைத் தழுவினமையால் சைவ சமயம் வீழ்ச்சியடைந்திருந்தது. அக்காலத்திலே ஒருவர் பின் ஒருவராகச் சமயா சாரியர்கள் தோன்றினர் கள். மாணிக்கவாசகர் திருவாசகத்தில் தமிழர் சமயக் கருத்துக்களை ஆங்காங்கு வைத்துப் பாடி யுள்ளார். தேவாரம் பாடியவர்களும் அவ்வாறே செய்துள்ளார்கள். திருநாவுக்கரசர், சம்பந்தர், சுந்தரர் முதலியோர் விளங்கிய காலத்தில் சைன மதமே தமிழ் நாட்டில் வேரூன்றி யிருந்தது. திருநாவுக்கரசர் கி. பி. ஏழாம் நூற்றாண்டின் பிற் பகுதியில் விளங்கியவராவர். சம்பந்தர் எட்டாம் நூற்றாண்டின் முற்பகுதியில் விளங்கினர். சுந்தரர் ஒன்பதாம் நூற்றாண்டில் விளங்கினர். ஒன்பதாம் நூற்றாண்டிலும் அதற்குப் பின்னும் புத்த சமயம் தென்னாட்டில் வலி பெற்றதாகச் சரித்திரம் இல்லை.

சமயாசாரியருக்குப் பின் பட்டினத்தடிகள் தோன்றினர். அவரும் தமது பாடல்களில் தமிழர் சமயக் கருத்துக்களை நன்கு எடுத்துக் கூறியுள் ளார்.

Koviloor Acadamy

சித்தாந்த சாத்திரங்கள் தோன்றுதல்

கி. பி. எட்டாம் நூற்றாண்டு வரையில் சங்கராசாரியர் என்னும் ஒரு பிராமணர் மலையாளத்தில் தோன்றினர். அவர் உலகம் பொய்த்தோற்றம்; உயிர்கள் எல்லாம் கடவுளின் நிழல் என்று கூறுவதாகிய ஒருவகைச் சமயக் கருத்துக்களை மக்களிடையே பரவச் செய்தார். அம்மதம் மாயாவாதம் எனப்பட்டது. "நானே பிரமம்" எனக் கூறுவதாகிய சமயக் கொள்கை மக்களிடையே பரவுதலும், தமிழ் மக்கள் பலர் தமது உண்மையான சமயக் கருத்துக்கள் யாவை என்று அறிய மாட்டாது மயங்குவாராயினர். அக்காலத்தில் மெய்கண்டார், அருணந்தி சிவாசாரியார், உமாபதி சிவம், மறை ஞானசம்பந்தர் போன்ற அறிஞர் தோன்றி இதுவரையும் குருமாணுக்க முறையில் வந்தனவும், திருமந்திரம், தேவார திருவாசகம் முதலியவைகளில் கூறப்பட்டுள்ளனவுமாகிய தமிழர் சமயக் கருத்துக்கள் எல்லாவற்றையும் திரட்டி சைவ சித்தாந்த நூல்களாகச் செய்தனர். இந்நூல்கள் உலகம், உயிர், கடவுள் என்னும் முப்பொருள்களின் உண்மைகளை ஆராய்வன.

Koviloor Acadamy

சிவஞானபோதம் மொழிபெயர்க்கப்பட்டதா?

சைவ சித்தாந்த நூல்களில் தலைசிறந்தது சிவஞான போதம். இதன் வழிநூல் சிவஞான சித்தியார். சிவஞான போதம் தமிழில் மெய் கண்ட தேவரால் செய்யப்பட்டது. இதன் மொழி பெயர்ப்பாகிய பன்னிரண்டு சூத்திரங்கள் வட மொழியிற் காணப்படுகின்றன. இதனைக்கொண்டு சிலர் சிவஞான போதம் வடமொழியிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டதெனக் கூறிக் கலகம் விளைக்கின்றனர். ஒரு காலத்தில் வடமொழியே கடவுள் மொழி என்றும், சமய சம்பந்தமான எவையும் வடமொழியில் இருத்தல் வேண்டும் என்றும் இல்லாவிடில் அவை முதன்மைபெறா வென்றும் கொள்ளும் பொல்லாத கொள்கை தமிழ் நாட்டில் பரவி யிருந்தது. அக்காலத்தில் கோயிற் புராணம் பாடியவர்கள்கூடத் தமது புரா ணங்களுக்கு மூலம் வடமொழிப் புராணங்கள் எனக் கூறியதோடு, கோயிற் பெயர்களுக்கும், கடவுட் பெயர்களுக்கும், வடமொழியைக் கொடுத்து வழங்குவாராயினர். அக்காலத்தில் இக்கருத்துள்ள மக்களுக்கு மெய்கண்ட நூல் உயர்வுடையதென அவர் கருத்திற் புகுத்தும் பொருட்டுச் சிலர் அந் நூலை வடமொழிப்படுத்தி, அவை வடமொழியில் கடவுளாற் சொல்லப்பட்டன என்று கூறுவாராயி னர். இதுபோன்ற பல கற்பனைக் கதைகள் புரா

Koviloor Acadamy

ணங்களில் காணப்படுகின்றன. மெய்கண்டார் தமது நூலை வடமொழியிலிருந்து மொழி பெயர்த்தாராயின், அதனை, வழிநூல் சார்புநூல் செய்தவர்களோ, மெய்கண்ட தேவரோ கூறியிருப்பார்களன்றோ. வடமொழியில் இருக்கும் சிவஞானபோதச் சூத்திரங்களும் தமிழறிஞரால் மொழிபெயர்த்து எழுதப்பட்டனவே.

சமயச் சீர்திருத்தம்

ஒரு குளத்தில் தண்ணீர் தேங்கி நிற்கின்றது. அது நெடுநாள் இறைத்துச் சுத்தப்படுத்தா விட்டால் சிறிது சிறிதாகக் கெட்டு மக்கள் குடிப்பதற்கோ, குளிப்பதற்கோ தகுதியற்றதாக மாறி விடுகின்றது. நம் முன்னோர் சைவ சமய உண்மைகளைப் பரப்புதற்கும், அவை நிலை பெறுவதற்கும் முயன்று பல நிலையான வேலைகளைச் செய்துள்ளார்கள். அவைகளுள் முதன்மையுடையது ஆலயம். முற்காலத்தில் ஆலயங்களே பள்ளிக் கூடங்களாகவும், பொது மக்களுக்கு அறிவு கொளுத்தும் விரிவுரைகள் நிகழ்த்தப்படும் இடங்களாகவும் இருந்தன. இன்று ஆலயங்களில் இவ்வுயர்ந்த நோக்கங்கள் மறக்கப்பட்டுள்ளன. அறிவு வளர்ச்சிக்குரிய செயல்கள் அங்குக் காணப்படவில்லை.

கடவுள் வழிபாட்டுக்குப் பொதுமக்கள், கட்டணம் கேட்கப்படுகின்றனர். இன்று கோயில்

Koviloor Acadamy

கள் வியாபாரச் சந்தைகளாக மாறியுள்ளன. புத்த, கிறித்துவ, முகமதிய ஆலயங்களில் இவ்வகையான வழிபாட்டு வரிகள் இல்லை. தமிழர் ஆலயங்களில் தமிழ் ஓதப்படாது ஆரியம் பாடப் படுகின்றது. இவ்வழக்கு ஒழிதல் வேண்டும். இவ் விருபதாம் நூற்றாண்டில் நாம் ஆயிரம் ஆண்டு களுக்கு முற்பட்டவையும் இக்காலத்துக்கு ஏற்றுக் கொள்ளாதனவுமாகிய வழக்கங்களைத் தவிர்க்க வேண்டும். நமது, உடை, உணவு, வீடுகளின் அமைப்பு போன்றனவே மாறுபடும்போது வழி பாட்டு முறையான மாற்றங்கள் ஏன் உண்டாகக் கூடாது?

முற்றும்.
